361

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

ஸ்ரீ ஜனகவல்லித்தாயார்

21 JU
MAD

ம்புடம் 13. ஸஞ்சிகை 7.

ULY - 1954 வர்ஷச்சந்தா ரூபாய் 3. ஜயஹூ ஆடிமீ

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	192
2.	தாம்பூலம் [ஸ்ரீ. உப. வித்வான், புரிசை, நடாதூர், க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் திருவள்ளூர்.]	194
3.	நற்போது போக்கு [ஸ்ரீ .உப. ஒரகடம், கே. ஸுதர்சனாசார்ய ஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]	195
4.	திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]	199
5.	யக்ஷ ப்ரச்னம் [ஸ்ரீ. உப. வித்வான், அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	203
6.	அருளிச் செயல்கள் [ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அட்வோகேட் மதுரை.]	207
7.	புத்தக விமர்சனம்	209
8.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி அட்வோகேட், M. A. B. L. திருச்சி.]	211
9.	ஸ்ரீ பாகவதத்தில் சில தர்மங்கள் [ஸ்ரீ. உப. வித்வான், தோட்டாலம், வேணுகோபாலாசார்யஸ்வாமி, தலைமை உபாத்யாயர், ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.]	213
10.	ஹம்ஸ ஸந்தேசம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, அட்வோகேட், M. A. B. L. திருச்சி.]	214
11.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	216
12.	செய்திகள்	219
13.	அட்டைப்படவிளக்கம்	221
14.	ப்ரார்த்தனா ச்லோகங்கள் [ஸ்ரீ. உப. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி, H. M. ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத பாடசாலை மாம்பலம்.]	222

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ஹூ ஆடி மீ { ஸஞ்சிகை 7

அஹோபிலே கா³ருட³ஶைலமத்⁴யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதா⁴ந: ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கி³தவாமபா⁴க³ம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்³யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்தி²தா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா³சந்த்³ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹப⁴க்தாநாம் கே³ஹே கே³ஹே ஸதா³ வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

நாம் எல்லோரும் தேடுவது இஹபர ஸுகமே. இவ்வுலக ஸுகத்திற்கு ஶரீர போஷணமும், மேலுலக ஸுகத்திற்கு ஆத்ம போஷணமும் அவச்யங்கள். ஶரீர போஷணத்திற்கு பல் துலக்கல், ஸ்நாநம் செய்தல், ஆஹாரம் உட்கொள்ளுதல் இவைகள் முக்ய மானவைகள். அதேபோல் ஆத்ம போஷணத்துக்கு நித்ய நைமித்திக கர்மாநுஷ்டாநங்களைச் செய்தல், பகவத் ஸ்வரூபத்தையும், குணாதிசயங்களையும் நன்குகற்றறிந்து, பகவத் த்யாநத்தில் ஈடுபடுதல் மிகவும் அவச்யங்களே. ஶரீரத்தைக்காட்டிலும் வேறுபட்டதான ஓர் ஶரீரி இருப்பதை யாரும் மறக்கமுடியாது. அதை எவ்விதமான பெயர் வைத்து வ்யவஹரித்த போதிலும் அதன் உண்மையை மறுக்க முடியாது. இப்பேர்ப்பட்ட உண்மையைக் காப்பாற்றவே நாம் நித்ய கர்மாநுஷ்டாநங்களில் ஈடுபடுதல் அவச்யம்.

உலகில் தோன்றிய ஒவ்வொரு வருணத்தோர்க்கும், ஆச்ரமத்தோர்க்கும் நித்ய கர்மங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஸந்த்யாவந்தந ஜபதபாதிகளைச் செய்தல், பகவதாராதனம் செய்தல், புராண படனம், ப்ரவசனம் இவைகள் நமக்கு விதிக்கப்பட்டவைகள். இம்மாதிரியான கர்மாக்களை நாம் செய்தே தீரவேண்டும். நாம் ஏன் இவைகளைச் செய்யவேண்டும் என்று கேட்பதற்கில்லை. அவைகள் நமக்கு ஏற்பட்ட கடமைகள். இதேபோல் சில நிமித்தங்களால் ஏற்படும் கர்மாக்களும் நமக்கு உண்டு. அவைகள் அந்தந்த குறித்த காலங்களில் மாத்திரம் செய்யவேண்டியவை. இவைகளைத்தான் நைமித்தகங்கள் என்று நாம் குறிப்பிடுகிறோம். இப்படி நாம் ஒவ்வொருவரும் நமக்கு ஏற்பட்ட நித்ய, நைமித்திக கர்மாக்களைச்செய்து வந்தால் ஶாஸ்த்ரங்களுக்கு நாம் கட்டுப்பட்டவர்களாவோம்.

இதேபோல்ஶாஸ்த்ரங்கள்நமக்குச்சிலகார்யங்களை விதிப்பதுபோல் சிலகார்யங்களை விலக்குகின்றன. இக்கார்யங்கள்நமக்கு நிஷித்தங்கள். இவைகளை நாம் செய்தால் நமக்குப்பாடம்உண்டாகும். பரலோகத்தை நாம் அடைவதில் சில தடங்கல்கள் ஏற்படும். இதனால் நிஷித்தமான கார்யங்களை நாம் செய்யக்கூடாது. செய்பவர்களையும் உலகம் நிந்திக்கிறது. ஆனபோதிலும் சிலர் இம்மாதிரி பாப கார்யங்களில் ஈடுபட்டபோதிலும் சில காலம் கழித்துத்தங்களது பிழையைக்குறித்து வருந்துவார்கள். அப்படி உண்மையிலேயே தங்கள் குற்றத்தைஉணர்ந்து வருந்துபவர்களுக்கு பகவான் நற்கதியை அளிப்பான் என்பதில் என்ன ஸந்தேஹம் காணமுடியும். உலகில் உள்ள மற்றவர்களின் ஸமூஹத்தில் கூடிக்கலக்க மறுக்கப்பட்டாலும்கூட, பகவான் முன்னிலையில் அவர்களும் மன்னிப்புக்குத் தகுந்தவர்களும், நற்கதியை அடையக்கூடியவர்களும் தானே.

பெருந்தீங்கிழைத்தராவணனுக்கும்கூடஅல்லவா கருணாமூர்த்தியான ராமபிரான் படையெடுப்புக்கு முன்னும், லங்கையை அடைந்த பின்னும், போர்க்களத்திலும் புத்தி புகட்ட முயற்சித்தனன். ஆதலால் குற்றங்கள் செய்தோர்களுக்குங்கூட ப்ராயச்சித்தம் உண்டு என்பதை நாம் ஸந்தேஹிக்க இடமே இல்லை.

நமது ஸமூஹத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் இதேபோல் அன்புடனும் பரந்த நோக்குடனும் நடந்துகொள்ளவேண்டும். நமக்கு தெரிந்தவர்களிடம் காணப்படும் குறைகளை விலக்குவதற்கு நாம் முயற்சித்தல் மிக அவச்யம். நித்ய கர்மாநுஷ்டாநங்கள் செய்யாதவன், ப்ரஷ்டன் என்றெல்லாம் எண்ணி அவர்களை ஏளனம் செய்து

புறக்கணிக்காமல், நம்மைச் சேர்ந்தவன், நாம் அவனைச் சீர்திருத்த வேண்டும் என்ற மனோ நிலையுடன் அவனை நல்வழிப் படுத்த முன்வர வேண்டும்.

'मां मदीयं च निखिलं चेतनाचेतनात्मकं स्वकैङ्कर्योपकरणं कुरु' என்று எப்படி எம்பெருமானை ப்ரார்த்திக்கிறோமோ, அதேபோல் நமது ஸமூஹத்தில் உள்ள ஒவ்வொருவனும் 'மதீயன்' என்று எண்ணி அவனையும் நற்கதிக்குக்கொண்டு வர முயற்சித்தலே நாம் செய்யவேண்டியது.

* * * * *

இவ்வருஷ ஆரம்பத்தில் மதுராந்தகம், மாம்பலம், பாதூர் என்ற மூன்று இடங்களில் பாடசாலைகள் இருந்தன. ஸ்ரீ மதழகியசிங்கரின் உதார குணத்தின் காரணமாக இவ்வருஷம் ஸ்ரீரங்கம், திருக்குடந்தை, வடுவூர், காஞ்சீபுரம், உத்திரமேரூர் முதலிய இடங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் பெற்றோர்களும், பொது ஜனங்களும் வெகு உத்ஸாஹத்துடன் பிள்ளைகளை அனுப்பியும், ப்ரசாரம் செய்தும் புதுப்பாடசாலைகளை ஆரம்பிக்க உதவினார்கள். அரசாங்கத் திட்டப்படி பாடங்களும், அதற்கேற்ப அங்கீகாரம் பெற்ற புத்தகங்களும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. நன்கு படித்தவர்களும், சிலர் நல்ல அநுபவமுள்ளவர்களுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படும் நற்குணம், கல்வி இவைகளைக் கண்டு பேரானந்தம் அடைந்து மேன்மேலும் நமக்கு உத்ஸாஹம் அளித்து பெருவாரியாக பிள்ளைகளை அனுப்புவார்கள் என்றும் அதன் மூலம் அவர்களும் பையன்களும் நற்பயனை அடைவார்கள் என்றும் நாம் நம்புகிறோம்.

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலைகள்

* * * * * * * * * *

சென்ற வர்ஷம் போலவே இவ்வர்ஷமும் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய நியமனத்தின் பேரில் மதுராந்தகம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் பதினெட்டு பிள்ளைகளுக்கு ஸ்ரீஸந்நிதி செலவில் ஆனி மீ 21வ உபநயநம் வெகு நேர்த்தியாக நடந்தது. பிள்ளைகளின் பெற்றோர்களும், பந்துக்களும் கூடவிருந்து களித்து ப்ரஹ்மோபதேசம்செய்வித்து, சாஸ்த்ரோக்தமாக நான்கு நாள் வைதிகாக்நியை ரக்ஷித்து தண்டுநீர் செய்தார்கள். ஆயிரக்கணக்கில் செலவு செய்தாலும் கைகூடாத கார்யங்களையும் நற்பலனையும் ஸ்ரீமதழகியசிங்கரின் க்ருபையினால் கிடைக்கப்பெற்றதாக எல்லோரும் ஸந்தோஷித்தனர்.

ஸ்ரீ அஹோபிலமடத்தில் உபநயநங்கள்

பாதூர் அக்ரஹாரத்திலுமுள்ள ஸ்ரீ அஹோபிலமடத்துப் பாடசாலை வித்யார்த்திகளுக்கு ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யநியமனத்தை முன்னிட்டு அவ்வூர் வைதிக ப்ரமுகர்கள் ஒன்று கூடி ஆனி மீ 23வ பெருமாள் கோயிலில் 33 பிள்ளைகளுக்கு உபநயநம் செய்வித்தனர். வைதிக கர்மாக்களில் உள்ள ச்ரத்தையின் காரணத்தினாலேயேதான் இம்மாதிரி கார்யங்களில் அவ்வூர் வாஸிகள் ஈடுபடுகிறார்கள் என்றால் அது அவரவர்களுடைய ஜன்மாந்தர ஸுஹ்ருதத்தால் ஏற்பட்டதே.

மாம்பலத்தில் உள்ளநமது பாடசாலையிலும் ஆனி மீ 28வ திங்கட்கிழமை ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய நியமனத்தின் பேரில் உபநயநங்கள் வெகு விமர்சையாக நடந்தேறின. ஸ்ரீஸந்நிதி செலவிலேயே வெகு அழகாக மூன்று சாகையில்உள்ள எட்டு பிள்ளைகளுக்கு உபநயநமும் அதற்காக விசேஷ ததீயாராதனமும் நடந்தேறியது.

இம்மாதிரியான பரந்த நோக்குகளைக் கேட்டும், பார்த்தும் பல ஊர் வாஸிகளிடமிருந்து தங்கள் தங்கள் ஊர்களில் புதுப்பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும் என்றும், உபநயநாதிகள் செய்துவைக்கவேண்டும் என்றும், ப்ரார்த்தனை பத்திரங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. தகுந்த காலங்களில் அவைகளை கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை எல்லோருக்கும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ:

தாம்பூலம்

ப்ராஹ்மணர்களுக்கு நான்கு ஆச்ரமங்கள் ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளன. அதில் முதல் ஆச்ரமத்தோனும், கடைசி ஆச்ரமத்தவரும் தாம்பூலம் போட்டுக்கொள்ளக்கூடாது. க்ருஹஸ்தன் முதன் முதலில் சேஷஹோமம் முடிந்தவுடன் ஸ்யாலனால் (மைத்துனனால்) வெற்றிலைப் பாக்குகளை பக்வமாகக் கொடுக்கப்பட்டுப் போட்டுக் கொள்கிறான். ஶாஸ்த்ரப்படி நடப்பவர்கள், நடக்க ஆசை உள்ளவர்கள் யாவரும் பகவானுக்கு நிவேதனம்செய்யப்பட்டதையே போட்டுக் கொள்ளவேண்டும். கடையில் வாங்கி அதை அலம்பி உடனே போட்டுக்கொள்ளக் கூடாது. வெற்றிலை பாக்கைப் போட்டுக்கொள்ளும் க்ரமத்தையும் ஶாஸ்த்ரம் கூறுகிறது. **'सुपूगं च सुपत्रं च सुधया च समन्वितम् प्रदद्यात्'** என்கிறபடி அதிதிகளுக்கு வெற்றிலை பாக்கு கொடுக்கும்போது ஒன்று அல்லது மூன்று பாக்குகள் கொடுக்கவேணும். இரண்டு பாக்குகள் ஒருபொழுதும் கொடுக்க வேண்டாம். **'एकपूगं सदाऽऽरोग्यं द्विपूगं निष्फलं भवेत् । अतिश्रेष्ठं त्रिपूगं च अधिकं नैव दुष्यति ॥'** [ஒரு பாக்கு கொடுப்பதால் ஶரீர ஆரோக்யம் உண்டாகிறது. இரண்டு பாக்குகள் கொடுப்பது வ்யர்த்தம். மூன்று பாக்குகள் மிக உத்தமம். அதற்கு மேற்கொண்டு கொடுப்பதில் தோஷமில்லை.] என்று இவ்வசனம் கூறுகிறது. நாம் வெற்றிலை போட்டுக்கொள்ளும்போது பாக்கை அல்லது பாக்குப் பொடியை முதலில் போட்டுக்கொள்ளக்கூடாது. **'मुखे पर्णमनिक्षिप्य पूगं खादति यो नरः । सप्तजन्म दरिद्रस्स्यात् नरकेषु निमज्जति ॥'** [வெற்றிலையை முதலில் போட்டுக்கொள்ளாமல் எந்த மனிதன் பாக்கை ஸாப்பிடுகிறானோ அவன் ஏழு ஜன்மங்கள் தரித்ரனாகப் பிறக்கிறான். பிறகு நரகத்தையும் அடைகிறான்.] என்று முதலில் பாக்கை போட்டுக் கொள்வதால் உண்டாகும் அநிஷ்டம் மேற்கூறிய வசனத்திலிருந்து தெரிகிறது. வெற்றிலையைப் போட்டுக்கொள்ளும்போது அதை நன்றாகத் துடைக்கவேண்டும். இல்லாவிடில் அதிலுள்ள பூச்சிகளால் ஶரீரத்தில் சில அஸௌகர்யங்கள் நேரிடக்கூடும். பிறகு அதிலுள்ள நரம்புகளை கிழித்தெரியவேண்டும். **'सिरा बुद्धिविनाशिनी'** என்கிறபடி நரம்புடன் உட்கொண்டால் அது நல்ல புத்தியைக் கெடுத்துவிடும். பிறகு வெற்றிலையின் அடியையும் நுனியையும் கிள்ளவேண்டும். பகவானுக்கு தாம்பூலம் ஸமர்ப்பிக்கும்போது பெரியோர்கள் வெற்றிலையின் அடியையும், நுனியையும் கிள்ளித்தான் ஸமர்ப்பிப்பார்கள். ஸ்ரீ ஸந்நிதியில் இன்றளவும் பார்க்கலாம் இதை. **'पर्णमूले भवेद्व्याधिः पर्णाग्रे पापसंभवः'** என்கிறபடி வெற்றிலையின் அடியை ஸாப்பிடுவதால் வ்யாதியும் நுனியை ஸாப்பிடுவதால் பாபமும் உண்டாகும். ஆகையால், நரம்பு, அடி, நுனி இவைகளை எடுத்துவிட்டு மூன்றாவது என்று சொல்லப்படும் சுண்ணாம்பை வெற்றிலையில் தடவி போட்டுக்கொள்ளவேண்டும். கிளிஞ்சல் முதலிய வஸ்துக்களைச் சுட்ட சுண்ணாம்பை போட்டுக்கொள்ளக்கூடாது. ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் 'கிளிஞ்சல் முதல் சுட்ட சுண்ணாம்புதானும்... திருவாணை கடவாதார் தின்னார்தாமே' என்று ஆஹார நியமத்தில் கிளிஞ்சல் சுண்ணாம்பை நிஷேதித்திருக்கின்றார். சுண்ணாம்பை வெற்றிலையில் தடவியவுடன் அதை மடித்து இரண்டு பக்கங்களிலும் கொஞ்சம்கிள்ளி கீழே போட்டுவிட்டு பிறகு வெற்றிலையைப்போட்டுக்கொள்ள வேண்டும். **'पर्णस्यपार्श्वद्वितयम्'** அதாவது— சுற்றிலை கூடாது என்று நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. வெற்றிலையையும்பாக்கையும் சேர்த்தும் போட்டுக்கொள்ளக் கூடாது. கடைசியில் சுண்ணாம்புவைத்திருந்த வெற்றிலையை ஸாப்பிடலாகாது. **'चूर्णपर्णं हरत्यायुः'** என்கிறபடி சுண்ணாம்பு வைக்கப்பட்டிருந்த வெற்றிலையைத் தின்றால் ஆயுஸ் குறைந்து விடும். **'सुरापानसमं ज्ञेयं ताम्बूलेन सहोदकम्'** என்று நிஷேதமிருப்பதால் வெற்றிலைப்பாக்கை போடுக்கொண்டு அத்துடன் தீர்த்தம் ஸாப்பிடக் கூடாது. ஸாப்பிட்டால் கள்ளைக் குடித்த பாபம் அதனால் உண்டாகும். **'बीजभूतं तु भुञ्जानो हिंसा दोषेण युज्यते'** என்கிறபடி நடுவ

ஸ்ரீ:

நற்போதுபோக்கு

பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல்

ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் சிறந்தமெய்யடியார்கள் எனப்படுவர் ஆழ்வார்கள். அவர்கள் பன்னிருவராவர். அன்னோர் அருள் வாக்கும் தெய்வத் தன்மையும் வாய்ந்தவர்கள்.

அவ்வாழ்வார்களுள் திருமழிசைப்பிரான்என்பவர் ஒருவர். மஹீஸாரக்ஷேத்ரமெனப்படும்திருமழிசை யென்னும் தலத்தில் அவதரித்தமை பற்றி அப்பெரியாருக்கு அத்திருநாமமுண்டாயிற்று. 'பக்திஸாரர்' என்றும் அவர் கூறப்படுவர். அவ்வான்றோர், கச்சிமா நகரிலுள்ள 'திருவெஃகா' என்னும் திருப்பதியில் அரவணை மீது அறி துயில் கொண்ட கோலமாய் எழுந்தருளியுள்ள அமலனாதிபிரானை வணங்கி வழிபட்டுவந்து, அங்கு அயலிலிருந்த ஒரு பொய்கைக்கரையில் பலகாலம் பகவானைத் தம் உள்ளக் கமலத் திருத்தி யோகம் செய்து வந்தார். அப்போழ்து அத்தவ முனிவரிடம் பல சீடர்கள் வந்திருந்து ஞான நூல்களை ஓதியும் தொண்டுகள் பல புரிந்தும் வந்தனர். அத்தொண்டர்களுள் கணிகண்ணர் என்பார் ஒருவர். அக்கணிகண்ணர்மற்றைத்தொண்டரனைவரினும் கல்வி கேள்விகளாலும், தம் ஆசிரியருடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு பணிவிடை புரிவதாலும், மற்றும் பல நன்னடத்தைகளாலும் சிறந்து விளங்கினர். ஆதலின் அம்மழிசைப்பரர் ஏனையோர்களினும் அக்கணிகண்ணர்பால் மிக்க அன்பு பாராட்டிவந்தார்.

இவ்வாறாக: அந்த ஆழ்வார் தங்கியிருந்த தவச் சாலையை ஒரு கிழவி நாடோறும் வைகறையி லெழுந்து வந்து, கூட்டி மெழுகிச் சுத்தஞ் செய்து கோலமிட்டு அலங்காரம் செய்து வந்தனள். அம்முதியாளின் உள்ளன்பை உன்னிய மழிசைக்கிறைவர், அவள் பால் அன்பு கொண்டு கூனிக்குறுகி நரை திரைமேலிட்ட அவளது மூப்புத் தன்மையைத் தமது அருட்பார்வையால் மாற்றியருளினார். அதனால் அவள், கண்டோர்வியக்கும்கட்டழகுஅமைந்த ஓர் இளமங்கையாக விளங்கினள். ஆழ்வார் அருளினால் ஓர் அழகிய அமரப் பெண்ணென விளங்கிய அப்பணிமகள், தான் அடைந்த எழில் நலத்தினைக் கண்டு அகமகிழ்ந்து, அப்பெரியாரை அடிபணிந்து தன் அகம் சென்றனள்.

அக்காலம், கச்சிமா நகரைத் தனது அர

தற்கு வைக்கப்பட்டிருக்கும் கொடியின் வெற்றிலையை புஜிப்பவன் ஹிம்ஸை செய்வதால் உண்டாகும் தோஷத்தை அடைகிறான். ஆகையால் விதைக்கு வைத்த வெற்றிலையை தின்னக்கூடாது. இரண்டே நிமிஷங்களில் நாம் தினம் போட்டுவரும் தாம்பூலத்தில் இத்தனை விதி நிஷேதங்கள் இருக்கின்றது. ஶாஸ்த்ரப்படி நடப்பவர்களுக்கு இது பெரிய காரியமில்லை. மற்றவர்களும் இதில் சொல்லியபடி நடந்தார்களானால் நன்மையை அடைவார்கள். மாறுதலாக நடப்பவர்களுக்கு இதில் சொல்லப்பட்ட கெடுதல்கள் நேராதென்று எந்த ஆஸ்திகனால் சொல்லமுடியும். தாம்பூலம் போட்டுக்கொள்ளும் க்ரமத்தை ஸ்ரீ தேசிகன் ஆஹார நியமத்தில் ஸாதித்திருக்கும் பாட்டு பின்வருமாறு:—

வெற்றிலைமுன்றின்னாதே தின்னும் பாக்கும்
வெற்றிலையி னடிநுனியு நடுவி லீர்க்கும்
வெற்றிலையும் பாக்குமுடன் கூட்டித்தின்னும்
விதவைக்கு முதன்முடிவாச் சிரமத்தார்க்கும்
வெற்றிலையும் சுண்ணம்பினிலையு மற்றும்
விரதங்கொண்டிடுநாள்வெற் றிலையும் பாக்கும்
வெற்றிலை தின்னா நிற்கப் பருகு நீரும்
விதையெனவைத் ததுதினலும்விலக்கினாரே.

சிருக்கையாகக்கொண்டு ஆண்டு வந்த * பல்லவர் கோன், அப்பணி மகளின் வடிவழகில்ஈடுபட்டு, அவளைத் தனது அன்பிற்குரிய காதலியாக ஏற்று, அவளுடன் இன்புற்று வாழ்ந்து வந்தான். இன்னம் ஆண்டுகள் பல கழிந்தன. ஒரு நாள் அப்பல்லவர் கோமான், தன் அன்பின் மிக்க காதலியான அந்நங்கையை நோக்கி, 'மெல்லியலே! நரை திரைகள் என்னைப்பற்றி என் உருவின் நலத்தை வரவரக் குறைத்துக் கொண்டு வருகின்றன. எங்கு யான் மூப்பினால் தளர்ந்து குறைந்து உருக்குலைந்து போவேனோ என்னும் அச்சம், என் மனத்தைப் பெரிதும் வருத்துகின்றது. யான் உன்னைக் காதலியாகக்கொண்ட காலம் முதல், ஆண்டுகள் பலவாயினும், உன் வடிவழகிற் சிறிதும் குன்றாது என்றும் நல்ல இளமையுடன் விளங்குகின்றனை, இதன் காரணம் யாதோ?' என உசாவினன்.

அது கேட்ட அவ்வணங்கு 'அன்பு மிக்க மன்னவ! யான் இதற்குமுன் கூனிக் குறுகித் தளர்ந்த யாக்கையோடு கூடிய ஒரு முதுமகளாகவே யிருந்தேன். இந்நகரில் திருவெஃகாவென்னும் திவ்ய தலத்திலுள்ள தொருபொய்கைக்கரையில் 'பக்திஸாரர்' எனும் ஒரு பெரியார் அருந்தவம் இயற்றி வருகின்றார். அவரோ தெய்வத் திருவருள் பெற்ற ஒரு விழுமியோர்; மறந்தும் புறந் தொழாத் திறம் படைத்த நெஞ்சினர். அவ்வான்றோர் இருந்து தவம் செய்யும் சாலையை யான் தினம் கூட்டி மெழுகி கோலமிட்டு அலங்கரித்து வந்தேன். எனது அந்தப் பணிவிடைக்கு அகமகிழ்ந்த அம்முனிவர், எனக்கு என்றும் மாறாத இந்த வளர்ப்பும் இளமையும், அமையுமாறு திருவருள் பாலித்தார். நீவிரும் அவ்வாழ்வார் அருளையடைவீரேல் என் போல் என்றும் இளமையோடிருக்கலாம்' என நவின்றனள்.

அந்நங்கை கூறிய வனைத்தும் கேட்டுணர்ந்த அப்பல்லவ வேந்தன், 'என்னாருயிர்ச் செல்வீ! அந்த ஆழ்வார் திருவருளை யான் பெறுவது எங்ஙனம்? அதற்கு விரகென்?' என்னலும் அம்மங்கை நல்லாள், 'நாத! நம் மாளிகைக்குத் தினம் கணிகண்ணர் என்னும் ஒருவர் ஐயமேற்க வருகின்றனர்; அவர், அம்மழிசைப் பெருமான் தொண்டர்களுள் தலைசிறந்தவர்; ஆழ்வார்க்கு அவரிடம் அளவிறந்த அன்புண்டு; நாளைக் காலை ஐயநிமித்தம் இங்கு வரும் அக் கணிகண்ணரை நீவிர் அழைத்து, அவரைத் துணையாகக்கொண்டு ஆழ்வார் அருளைப் பெறுவதே தக்கவழியாகும்' என்றனள். அவ்வாறே மறுநாட் காலை வழக்கம்போல் கணிகண்ணர் அங்கு வரக்கண்ட கோமன், அவரைத் தன் அருகே யழைத்து, 'நும் ஆசிரியரை யாம் காண விழைக்கின்றோம். ஆதலின் நீவிர் அவரை இங்கு அழைத்து வருக' என்று கூறினான். அச் சொல்லை செவியேற்ற கணிகண்ணர், 'மன்னவ! எம் ஆசிரியரோ, உலகப் பற்றை முற்றும் துறந்த ஒருயோகி. தங்களைப் போன்ற அரசர்களாலும் மற்ற யாவராலும் அவர் இவ்வுலகில் அடையத் தக்கது என்னுளது? துறவிக்கு வேந்தன் துரும்பாதலின்

---

*முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசைப்பிரானும் ஒரே காலத்தினரென்று கருதப்படுகின்றனர். திருமழிசையாழ்வார் காலத்தில் இந்தப் பல்லவராஜன் இன்னானென்று குருபரம்பரையிலோ திவ்யஸூரி சரித்திரத்திலோ குறிக்கப்படவில்லை. ஆனால்,

'காப்பு மறந்தரியேன் கண்ணனே யென்றிருப்பன்
ஆப்பம் கோழியவும் பல்லுயிர்க்கும் — ஆக்கை
கோடுத்தளித்த கோனே குணபரனே யுன்னை
விடத்துணியார் மெய்தேளிந்தார் தாம்.

[நான், திருவந்,— 93]

என்னும் இவரது பாசுரத்தில், எம்பெருமானைக் 'கோனே குணபரனே!' என்று விளித்தலாலும், 'குணபரன்' என்பான் முதல் மஹேந்த்ர வர்மபல்லவனென்பது ஶாஸந ஆராய்ச்சியாளருடைய கொள்கையாதலாலும், இவ்வாழ்வார் அவனது ஆட்சி காலத்திலிருந்தவரென்பது சிலர் கருத்து.

[ஆழ், கால நிலை பக்- 36]

உமதுவிருப்பை அவர் ஏற்றுக்கொள்ளார் என்பது திண்ணம்' என்று மறுமொழி பகர்ந்தார். அதனைக் கேட்ட அவ்வேந்தன், 'ஆழ்வாரது திருவருளைப் பெற்ற நீவிரும் அருள் வாக்குப் பெற்றுள்ளீர் எனக் கேள்வியுற்றிருக்கிறேன். ஆகலின் யான் இம்முதுமையினின்றும் நீங்கி, என்றும் மாறாத இளமையும் வலிமையும் பெற்று உலகில் வாழுமாறு ஒரு பாடல் அருள்வீராக' என்றனன். அது கேட்டகணிகண்ணர், 'இறையவரே! யான் மானிடம் பாடவந்த கவியேனல்லேன். என் நா, வீறுகொண்டு நாரணனைப் பாடுமேயல்லது மானிடத்தைப் பாடும் தன்மைத் தன்று; மன்னு மனிசரைப் பாடிப் பாடிப் படைக்கும் பெரும் பொருள் எத்தனை நாளைக்குப் போதும்? அத்தகைய பொருளினும் எனக்கு நசையில்லை; ஆதலின் ஐய! நும் கருத்துக்குச் சிறிதும் இசையேன்' என்றார். அது கேட்ட காவலன் கடுஞ்சினங்கொண்டு, 'நீயோ ஐயமேற்றுண்ணும் வறியன்; உனக்கு இவ்வளவு துணிவா?' என்று சீறி அவரை நோக்கி .நீ என் கருத்துக்குச் சிறிதும் இசைந்திலையாதலின், இனி என் நாட்டின் எல்லைக்குள் தங்கியிருத்தல் தகாது; இக்கணமே என் நாடு கடந்து வெளிச் செல்வாயாக' என்று கடிந்து கூறினன். அச்சொல் செவியேற்ற கணிகண்ணர் அக்கணமே அவண் விட்டகன்று, தம் ஆசிரியரான மழிசைப் பிரான் திருமுன்னர் சென்று, அரசனது ஆணையை விண்ணப்பித்துத் தாம் வெளி நாடு செல்வதற்கு அனுமதி கேட்டனர். ஆழ்வார் அம்மாணவரை நோக்கி 'கணிகண்ண! நீ இவண் விட்டகல்வையேல், நின்னைப் பிரிந்து யான் தனித்திரேன். ஆதலின் யானும் உன்னுடன் வருவல். யான் உன்னுடன் செல்வனேல், இங்குப்பாம்பணை மேற் பள்ளிகொண்டருளும் பரந்தாமன் மட்டும் இருப்பரோ? அப்பரம் பொருளும் நம்மைத் தொடர்வது திண்ணம்' என்று கூறி, அரவணையில் அறிதுயில் கொண்டுள்ள அமலனாதிபிரான் ஸந்நிதியை யடைந்து,

'கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா-துணிவுடைய
செந்நாப் புலவனிதோ செல்கின்றேன் நீயுமுன்
றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கோள்'

என்றொரு செய்யுள் கூறி அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். ஆ! என்ன அதிசயம்! ஆழ்வார் நாவினின்றும் அமிழ்தினுமினிய செந்தமிழ்ப் பாடல் வெளிவந்ததுதான் தாமதம்! அக்கணமே அடியார்க்கெளியனான அச்சுதன், பள்ளியினின்றும் புறம் போந்து, தம் பாம்புப் பாயலைச் சுருட்டி யெடுத்துக்கொண்டு திருமகள் மண்மகள் என்னும் தம் இரு தேவியரும் தொடர்ந்துவர ஆழ்வார் பின்னே செல்வாராயினர். அப்பட்டோ! அக்கச்சிமா நகரினுள்ள மற்ற ஆலயங்களில் எழுந்தருளியுள்ள தேவர்களும், முனிவர்களும் தத்தம் இருப்பிடங்களை விட்டு அவ்வெம்பெருமானைப் பின்பற்றி நடந்தனர். அப்போது, நகரிற்சிறந்த அக் காஞ்சிமாநகரம், கோசலை பெற்ற குரிசில் ஸ்ரீராமபிரான் கானகம் நோக்கிச் சென்ற காலை அயோத்திமாநகர் இருந்த நிலைமையில் பொலிவிழந்து நின்றது. அப்பொழுது, அங்கு வானில்பகலவனும் தன்னொளிகுன்றி நின்றான். வாவி கூவ தடாகங்களும் வற்றிப் போயின. பயிர்களும், பழமரங்களும், காவினங்களும் வாடிச் சாம்பின. எங்கும் இருள் சூழ்ந்து பரவத் தொடங்கியது.

இவ்விபரீத நிகழ்ச்சியைக்கண்ட காவலன் மனங்கவன்று, 'அந்தோ! மெய்யாரிடம் அபசாரப்பட்டதன் விளைவன்றோ இது? யான் உய்யும் வகையுண்டோ?' என்று கழிவிரக்கங் கொண்டு, தனது அமைச்சர் முதலிய பரிவாரங்களுடன், கணிகண்ணர் சென்ற வழியைப் பின்பற்றித்தொடர்ந்து அக்கணிகண்ணரையும் ஆழ்வாரையும் அடி தொழுது, தன் பிழையை பொறுத்தருளுமாறு இரந்து கேட்டுக்கொண்டான். இறைவன் பால் இரக்கம் கொண்ட அக்கணிகண்ணரும் ஆழ்வாரை மீண்டும் கச்சி நகருக்கே எழுந்தருளவேண்டுமென வேண்டினர். இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவரும் தம் தொண்டர் விருப்பை மறுக்காது தம் பின்வந்த பரமனை நோக்கி,-

'கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்
கச்சி மணிவண்ணா நீகிடக்க வேண்டும்-துணி
வுடையசெந்நாப் புலவனும் போக்கொழிந்தேன்
நீமுன்போல்
பைந்நாகப் பாய்விரித்துக் கோள்'

என முற்கூறியசெய்யுளையே மாற்றிப்புகன்றார்.

பத்துடையடியவர்க் கெளியனுன பரமனும் அவ்வாறே மீண்டும் தம் தேவியருடன் கச்சிமாநகர்க் கெழுந்தருளி, வெஃகாவிலுள்ள தம் திருக்கோயிலுட்புகுந்து பாம்பணைவிரித்து அதிற் பள்ளிகொண்டருளினர். ஆனுல், அப்பெருமாள் அடியார் பொருட்டுத் தாம் செய்த அவ்வருஞ் செயல் உலகில் அனைவர்க்கும் என்றும் விளங்குமாறு, முன்னிருந்தபடி யல்லாமல் மேற்றிசை நோக்கிக் கண்வளர்ந்தவராயினர். மற்றைத் தேவர்களும் முன்போல் தத்தம் ஆலயங்களில் அமர்ந்தருளினர். அந்நகரமும் பண்டை நிலையை யடைந்தது. அன்றுமுதல் அவ்வெம்பெருமானுக்குச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்றே திருநாமம் வழங்கி வருகிறது. வடமொழி வாணர், 'யதோக்தகாரி' என்பர். பல்லவர்கோனும் கணிகண்ணர் ஆழ்வாராகிய இருவரிடத்தும் பக்திப் பெருங்காதல் கொண்டு, அவர்களை வணங்கிப் பல நாள் வழிபட்டு வந்து, பின் நற்கதியெய்தினன்.

—ஃ—

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைத வேதாந்த கோசம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின்
திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸம்பாதகர்:— ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசாரியர். M. O. L.
(D. T. தாதாசாரியர்)

விலை ரூபாய் 20—0—0.

கிடைக்குமிடம்
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ் திருவுள்ளூர்.

இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு மிகவும் முக்யமானது. இதில் 107 புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட அனேக பதங்களுக்கு விசிஷ்டாத்வைத ரீதியில் அப்புத்தகங்களிலுள்ள வ்யாக்யாநப்படி அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. சுருங்கச்சொல்லின் இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு ஒரு நிகண்டு (அகராதி)வாகத் திகழ்கிறது என்னலாம். 374 பக்கங்கள் உள்ளன. 500 காப்பிகளே கைவசமிருப்பதால் இப்புஸ்தகத்தை விரும்புவோர்கள் முந்திக்கொள்ளவேணும். புஸ்தகம் நல்ல பயிண்டுடன் கூடியிருக்கிறது.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நா—அறைபறை. நாங்கள் ஒருவ்ரதம் அநுஷ்டிக்கின்றோம். அதற்காக வாத்யம் வேண்டும். அதை இங்குப் பெற்றுப்போவதற்காக வந்திருக்கின்றோம்.

வா—(சிரித்துவிட்டு) வாத்யம் வேண்டுமானால் அது கிடைக்கும் கடைகளுக்கோ அதைச் செய்து விற்பவர்கள் இருக்குமிடத்திற்கோ போகவேண்டும். இங்கு வந்தது என்?

நா—மாயன் மணிவண்ணன். நாங்கள் கடைகளையும் அறியோம். வேறு மனிதர்களையும் அறியோம். எங்களுக்கு எது வேண்டுமானாலும் ஸ்ரீக்ருஷ்ணன் ஒருவரே கதி. அவரைத் தவிர வேறொருவரிடத்திலும் ஒன்றையும் அபேக்ஷிக்கமாட்டோம். அவர் தருவதையே பெற்று உபயோகித்து மகிழ்வோம்.

வா—இது மிக அல்பமானவிஷயம். இதைப் போய் நீங்கள் எஜமானனிடத்தில் கேட்பதும் தகாது; அவரும் இதைப் பொருட்படுத்த மாட்டாரென்றே நினைக்கின்றேன்.

நா—'நென்னலே வாய் நேர்ந்தான். ஐயனே! இப்பொழுது நீ புதிதாக நினைப்பதற்கும் ஆலோசிப்பதற்கும் இங்கு விஷயம் ஒன்றுமில்லை. நேற்றே நாங்கள் போய் அவரைச் சேவித்து விண்ணப்பம் செய்தோம். கருணாமூர்த்தியான அவர் உடனே 'அப்படியே ஆகட்டும். உங்களுக்கு வேண்டியதையெல்லாம் தருகின்றேன். உங்கள் உத்ஸவத்தை வெகுநேர்த்தியாக நடத்துங்கள்' என்று வாக்தானம் செய்தார். அது உனக்குத் தெரியாது எனத் தோன்றுகிறது. நேற்று நாங்கள் இங்கு வந்து எம்பெருமானை ஸேவித்துத் திரும்பியபோது வேறு த்வாரபாலன் இங்கிருந்திருப்பான். நீயல்லை. அதனால் உனக்கு இவ்விஷயம் தெரியக்காரணமில்லை போலும். இப்போது நாங்கள் உள்ளே புகவேண்டியதுதான் தாமதம். உடனே எம்பெருமான் எங்கள் விஷயத்தில் அருள் புரிவான். ஆகையால் மணிக்கதவம் தாள்திறவாய்.

வா—(சிறிது ஆலோசித்து) ஸரி. அதெல்லாமிருக்கட்டும். எஜமானருக்கு விரோதிகள் பலபல பேர் இருக்கின்றனர். ஸமயம் பார்த்து அவருக்குப் பெருந் தீங்கு விளைவிக்க இடைவிடாது முயற்சிசெய்துகொண்டிருக்கின்றனர். இதுவரையில் எத்தனையோ அஸுர ப்ரக்ருதிகள் வெவ்வேறு வேஷம் பூண்டு வந்து த்ரோஹம் செய்திருக்கின்றார்கள். ஆகையால் 'நிச்சயமாய் உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் எவரையும் உள்ளே விடக்கூடாது' என்று கண்டிப்பான உத்தரவை பெரிய எஜமான் எங்களுக்குப் பிறப்பித்திருக்கின்றார். நீங்கள் உண்மையில் இவ்வூர் பெண்கள் தானா அல்லதுவேறு யாராவதா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் நான் ஒரு தீர்மானம் செய்யவேண்டும். அதுவரையில் நான் கதவைத் திறக்கமுடியாது.

நா—தூயோமாய் வந்தோம். எம்பெருமானுடைய சாரவிந்தங்களையே சரணமாகப் பற்றினவர்கள் நாங்கள். அவனுடைய க்ருபையை முன்னிட்டு அவனுடைய ஆராதனமான வ்ரதத்தை அநுஷ்டிப்பதற்காக அவனுடைய உதவியையே நாடி வந்திருக்கின்றோம். இப்படி நிஷ்கல்மஷமான பகவத் பக்தி பண்ணி அதனால் சுத்தர்களான எங்களிடத்தில் நீ வேறு விதமான ஸந்தேஹம் கொள்ளலாமா? இங்கு எத்தனைப் பெண்கள் வந்திருக்கின்றார்கள், பார். இவர்களில் பலரை நீ அறிந்திருப்பாய். உன் பக்கத்து வீட்டு எதிர் வீட்டுப் பெண்கள்கூட பலர் இருக்கலாம். வெளியேவந்து நன்றாகப் பார். எங்களை முன்பின் அறியாவிட்டால் கூட எங்களைப் பார்த்தே நீ எங்கள் ஸ்வரூபத்தை உள்ளபடி அறியலாமே. நாங்கள் விரோதிகளல்லோம். விரோதி வர்க்கங்களைச்சேர்ந்தவர்களல்லோம். அவனுடைய அடியார்கள் நாங்கள். அவனுடையவர்களைச் சேர்ந்தவர்கள். ஆகையால் சிறிதும் ஸந்தேஹப்படாதே. கதவைத் திற.

வா—எதற்கும் நீங்கள் கொஞ்சநேரம் காத்திருங்கள். எஜமானர்களில் எவரும் இன்

னும் எழுந்திருக்கவில்லை. அவர்கள் எழுந்திருக்கட்டும். அவர்களிடத்தில் விண்ணப்பம் செய்து அவர்கள் கட்டளைப்படிச் செய்கின்றேன்.

நா—துயிலெழ பாடுவோன். அப்பனே, நீ அவ்விதம் சொல்லக்கூடாது. நாங்கள் போய்த் திருப்பள்ளியெழுச்சிபாடி அவர்களை எழுப்ப வேண்டும். அந்த ஸேவை எங்களுக்குப்பரம உத்தேச்யம். அவர்கள் எழுந்த பிறகு நீ போய் விக்ஞாபகம் செய்து அதன் பிறகு நாங்கள் உள்ளே போவதானால் திருப்பள்ளி யெழுச்சி ஸேவையை நாங்கள் இழக்க நேரிடும். 'நீங்கள் வந்து என்னை எழுப்புங்கள். உங்களுக்கு வேண்டியதைச் செய்கின்றேன்' என்று நேற்று எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளினான். ஆகையால் நீ எங்கள் மீது இரக்கம்கொண்டு இப்போதே உள்ளே போக அனுமதிக்கவேண்டும்.

வா—('இதென்ன தர்ம ஸங்கடமாயிருக்கிறதே. பெண்களைப் பார்த்தால் உடனே கதவைத்திறந்து உள்ளே விட்டு விடவேணு மென்று தோன்றுகிறது. பெரிய எஜமானருடைய கட்டளையோ மிகவும் கண்டிதமான தொன்று.இப்பொது என்னசெய்வது'? என்று தனக்குள் ஆலோசித்துப் பிறகு) நீங்கள் சொல்வதெல்லாம் ஸரிதான். ஆகிலும் எஜமானருடைய ஆஜ்ஞையை மீறி நானாக ஒன்று செய்வது உசிதமாகத் தோன்றவில்லை. அவர்கள் எழுந்து உத்தரவு செய்யும் வரையில் நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும்.

நா—வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மா நீ. **'अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत्'** (அனுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதஞ்ச யத்) என்றபடி அநுகூலமான வார்த்தையையே சொல்லக்கூடிய உனது வாயில் விபரீதமான நிஷேத வாக்யம் வருவது உசிதமன்று. எங்கள் நோன்புக்கு முதல் முதலாகச் செய்யவேண்டிய கார்யம் எம்பெருமானைத் திருப்பள்ளி யெழுப்புவதுதான். இதற்கு நீ தடை செய்யக்கூடாது. 'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்பார்கள். ஆகையால் இந்த முதல் காரியம் ஸரியாக நிறைவேறும்படி நீ அருளவேண்டும். எங்களுக்கு எம்பெருமான் எப்படி ஸ்வாமியோ அப்படியே நீயும் ஸ்வாமி. ஆகையால் எம்பெருமான் போலவே நீயும் எங்கள் காரியத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும். மேலும் எம்பெருமானுடைய த்வாரபாலகனான நீ அவனுகந்ததையே செய்யவேண்டும். அவனைப் போலவே தயா தாக்ஷிண்ய பூர்ணனாயிருக்கவேண்டும்.

வா—(பெண்களுடைய தோற்றத்தாலும், விநயத்தாலும், வார்த்தைகளாலும், எம்பெருமான் ஸேவையிலுள்ள அபிநிவேசத்தாலும் பரவசனாய் அதற்கு மேல் ஒன்றும் சொல்ல மாட்டாமல்) நல்லது. உள்ளே போங்கள் (என்று சொல்லித் தொட்டிக் கதவை நன்றாகத் திறந்து விட்டு விலகி நின்றான்.) பெண் குழந்தைகள் அத்தனை பேரும் ஒரு சிறு வாசலில் நுழைந்து போவது என்றால் எவ்வளவு கஷ்டமாயிருக்கு மென்பது தோன்றாமல் அவ்வளவு இளகிய நெஞ்சுடையவனாய், அவ்வளவு பரவசனாய், நின்ற த்வாரபாலகனைப் பார்த்து நாயகப்பெண் 'அம்மா நீ நேசநிலைக்கதவம்நீக்கு' என்றாள். 'அப்பனே, நீ எங்களிடத்தில் இவ்வளவு அன்பு காட்டியதைப் பற்றி ரொம்ப ஸந்தோஷம். ஆனால் தொட்டி வாசலைமாத்திரம் தான் நீ திறந்திருக்கின்றாய். அதன் வழியாக நாங்கள் எல்லோரும் உள்ளே போவது ச்ரமமாயிருக்கும். உசிதமுமன்று. ஆகையால் பெரிய கதவைத் திறந்துவிடு' என்று அவனுக்குத் தெளிவுபடக் கூறினாள். க்ருஹ த்வாரங்களில் கதவு பொருந்தி நிற்பதற்காகக் கீழ்ச்சட்டம், மேல் சட்டம், இருபக்கங்களில் இருசட்டங்கள் என்றிப்படி நான்கு சட்டங்களாலாக்கிவைக்கப்பட்டிருக்குமுருவுக்கு 'நிலை' என்று பெயர். ஸாமான்யமாய் இதை 'வாசற்படி' என்றும் சில விடங்களில் வ்யவஹரிப்பதுண்டு. அதில் பொருந்தி நிற்கின்ற பெருங்கதவு இங்கு 'நிலைக்கதவம்' எனப்பட்டது. நேசம் என்பது ஸ்நேஹம், ப்ரீதி. த்வாரபாலர்கள் எம்பெருமானிடத்தில் அநுகூலர்களாயிருப்பவர்கள் விஷயத்தில் அன்பு பாராட்டிக் கதவைத் திறந்து விடுகின்றார்கள். இவ்விதமாக ப்ராக்ருதத்தில் வாசல் காப்பான் தங்கள் விஷயத்தில் காட்டிய ஸ்நேஹத்தைக் கதவின் மேல் வைத்து 'நேச நிலைக்கதவம்' என்றாள் நாயகப் பெண்.

இப்படி நாயகப்பெண் கூறியவுடன் தெளிவு பெற்ற வாசல்காப்பான் நிலைக்கதவைத் திறந்து விட்டான். பெண்கள் எல்லாரும்

199548

जय जय कृष्ण जय जय कृष्ण
जय विजयी भव जय जय कृष्ण

என்று ஆரவாரம் செய்துகொண்டு உள்ளே சென்றார்கள்.

இங்கு இப்பெண்கள் செய்த பகவதநுபவம் 'மாயன் மணிவண்ணன்' என்பதில் அடங்கியிருக்கின்றது. இப்ரகரணத்திலும் பரத்வம் தொடங்கி அநுபவம் நடக்கின்றதென்பதைக் காட்ட 'மாயன்' எனப்பட்டது. ஸாக்ஷாத் தாங்கள் அநுபவிக்கும் ஸ்ரீக்ருஷ்ண திவ்ய மங்கள விக்ரஹத்தை யநுஸந்தித்து 'மணிவண்ணன்' எனப்பட்டது.

திருப்பாவைக்கதையில்
த்வாரபால ப்ரார்த்தனம் என்ற
மூன்றாம் அதிகாரம் முற்றிற்று.

17. அம்பரமே

த்வாரபாலகனுடைய அநுமதியைப்பெற்று அரண்மனைக்குள் தோழிகளுடன் சென்ற நாயகப் பெண் அங்கு வாய்பேசாமல் வெகு அமைதியாய் தந்தமது வேலையைச் செய்துகொண்டிருக்கும் வேலைக்காரர்களைக் கேட்டு நந்தகோபர் முதலியவர்களில் யார் யார் எங்கு எங்கு படுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டாள்.

பெரியோர்களின் அனுமதி பெற்றே சிறுவர்களிடம் சொல்லவேண்டியது முறையான படியினாலும் அப்படிச் செய்யாமல் நேராக எம்பெருமானிடம் சென்றால் அது அவனுடைய திருவுள்ளத்திற்கு உகந்ததாக இராதாகையாலும் முதலில் எம்பெருமானுடைய தாய் தந்தையர்களை எழுப்பத் தீர்மானித்தாள். அவர்களுக்குள்ளும் தந்தை ப்ரதானராகையால் அவரை முதலில் எழுப்பினாள்.

கோபாலன் என்றால் பசுக்களை மேய்த்துக் காப்பாற்றுகின்றவன் என்பது பொருள். தொழிலைப்பற்றிவந்தஇந்தப்பெயர் அங்குள்ள யாவருக்கும் பொதுவானதொன்று. நந்தர் என்பது சிறப்புப் பெயர். 'கோபாலா' என்று மட்டும் கூப்பிட்டால் தன்னைத்தான் கூப்பிடுகின்றார்கள் என்று நந்தர் உணர்வது அறிதாகையாலும், 'நந்தரே' என்று மட்டும் கூப்பிடுவது மரியாதைக் குறைவாகையாலும் 'நந்த கோபாலா' என்று இரண்டையும் சேர்த்துக் கூப்பிட்டு அதன் மேல் 'எழுந்திராய்' என்று ப்ரார்த்தித்தாள்.

'நந்தர்' என்பதற்கு எல்லோரையும் ஸந்தோஷப்படுத்துகிறவர் என்பது அர்த்தம். கோக்கள் மிகவும் ஸாதுவாய், மங்களமாய், பரிசுத்தமாயிருக்கின்ற ப்ராணிகளாதலின் அவற்றோடு ஸர்வ காலமும் பழகிக்கொண்டிருப்பவர்களுக்கும் அந்தக் குணங்கள் உண்டாயிருக்குமாகையால் 'கோபால' என்கிற சொல் அவ்விடத்தில் அக் குணங்களிருப்பதைக் குறிப்பால் காட்டும். இப்படிப் பொருள் நிரம்பிய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள். ஆனால் இப்பெயரைச் சொல்வதற்குமுன் தங்கள் விஷயத்தில் அவருக்குள்ள ஸம்பந்தத்தை அறிவிக்கின்ற மற்றொரு சொல்லாலும் கூப்பிட்டாள். 'எம்பெருமான்' என்பது அச்சொல். ஸ்வாமி அல்லது தம்மை ஸொத்தாக உடையவன் என்பது அதன் பொருள். ஸ்ரீ க்ருஷ்ணனுக்குப் பிதாவாய் அதனாலேயே அவருக்கு ஸ்வாமியாய் இருப்பதனால் க்ருஷ்ணனைச் சேர்ந்தவர்களுக்கும் அவர் ஸ்வாமியாகின்றார். எங்களுக்கு ஸ்வாமியானபடியால் உம்மைச்சேர்ந்த எங்களுடைய அபேக்ஷையைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு உமக்கு உண்டு. நந்தகோபாலராய் உத்தம குணங்கள் பெற்றிருப்பதால் யார் எதை அபேக்ஷித்து வருகின்றார்களோ அவர்களுக்கு அதைச் செய்வது இயற்கையாகவே உம்மிடத்தில் அமைந்திருக்கின்றது. ஆகையால் எழுந்திருந்து எங்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று கருதி ப்ரார்த்தித்தாள்.

இவர்களோடு கலந்திருந்து வ்ரதாநுஷ்டானத்தை நிறைவேற்றி வைக்கும்படி ஸ்ரீ க்ருஷ்ணனைத் தரவேண்டுமென்பது இப்பெண்களின் கோரிக்கை. ஸ்ரீநந்தகோபருக்கு மிகுந்த ஔதார்ய மிருந்தாலல்லது அருமைப் புதல்வனை ஸ்ரீ க்ருஷ்ணனை இவர்கள் விரும்பியபடி இவர்களுடன் அனுப்புவது என்பது நடைபெறாது. ஆகையால் அவ்வித ஔதார்யம் அவருக்குஉண்டென்பதையறிந்து அதைக் குறிப்பிட்டு நாயகப் பெண் அவரைப் போற்றினாள் —

'அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்'

என்று. உத்தமமான வஸ்த்ரங்களென்ன, வாஸனைத்ரவ்யங்கள் சேர்க்கப்பெற்று இனியதாய் குளிர்ந்திருக்கின்ற தீர்த்தமென்ன, அறுசுவையுடன்கூடிய அன்னமென்ன, இவற்றைத்தானம்செய்கின்ற நந்த

கோபாலா எழுந்திராய்' என்றாள். யாராவது உடுக்கத் துணியில்லாமல் இருக்கின்றார்கள் என்பது தெரிந்தால் அவர்கள் அதற்காக முயற்சி செய்வதற்கு முன்பே அவர்களிருக்கு மிடத்திற்கு அவர்களுக்கு வேண்டிய வஸ்த் ரங்களை அனுப்பிவிடுவார். ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்லும் வழிப்போக்கர்களுக் குத் தாகம் உண்டானபோது குடிப்பதற்கு ரிய நீர் கிடைக்கும்படி ஆங்காங்கு தண்ணீர்ப் பந்தல் ஏற்படுத்துவார். அப்படியே பற்பல விடங்களில் தேசாந்தரங்களிலிருந்து வந்து கூடிய ஜனங்கள் ஆஹாரத்திற்கு வருந்தா மல் இருக்கும்படி பல தர்ம ஸத்ரங்களைக்கட்டி வந்தவர்களுக்கெல்லாம் அஹோராத்ரம் எந்த ஸமயத்திலும் ஆஹாரம் கிடைக்கும்படி செய் வார்.

க்ருஹத்தில் பல சுபகாரியங்கள் நடக்கும் போதும் மற்றும் நிமித்தங்கள் உண்டான போதும் எல்லோருக்கும் வஸ்த்ர தானத்தை யும் அன்ன தானத்தையும் அபரிமிதமாகச் செய்வார். ஜல வஸதியிராத ஊர்களில் குளங் களையும் கிணறுகளையும் வெட்டி உதவி செய் வார்.

அதிதிகள் வருவார்கள். அவர்களை உப சரித்து ஸ்நாநம் செய்வித்து புதிய வேஷ்டி களைக்கொடுத்து உடுத்திக்கொள்ளச் செய்வார். பிறகு ஷட்ரஸோபேதமான அடிசில் பறிமாறி புசிக்கச்செய்வார். அவரவர்களுடைய அபே க்ஷைக்குத் தக்கபடி ஸுகோஷ்ணமாய் அல் லது சீதளமாய் இருக்கும் தீர்த்தம் கொடுத்து உபசரிப்பார். அன்னம் தாரகம். நீர் போஷ கம். தாரகத்தை முதலில் சொல்லிப் பிறகு போஷகத்தைச் சொல்வது உசிதம். 'தின்னும் சோறும் பருகு நீரும்' என்றார் ஆழ்வார். ஆயினும் வஸ்த்ரம் தரித்தவுடனே பாத்யமாக வும் ஆசமநீயமாகவும் உபயோகப்படுகின்ற மையால் முதலில் நீர் கூறப்பட்டது. அன் றியும் போஜனத்திற்கு முன்பே தீர்த்தம் நிறைந்த வெள்ளி அல்லது தங்கத்தினால் செய் யப் பெற்ற பாத்திரம் அதிதிகளுக்குத் தான மாகக் கொடுக்கப்படுமாகையால் அதை நினை த்து முதலில் 'தண்ணீரே' என்றாள்.

இப்படி அவச்யம் வேண்டிய வஸ்துக்களை வழங்கி உலகத்திற்கு உபகாரம் செய்யக்கூடிய ஔதார்யம் வாய்ந்தவராகையால் எங்களுக்கு இப்போது அபேக்ஷிதமான ஸ்ரீ க்ருஷ்ண தானத்தைச் செய்து உபகரிக்கவேணுமென்று குறிப்பாக அறிவித்தாள். 'இவ்வளவு பெரிய உதவி செய்வதற்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யமுடியும்? ஒரு ப்ரத்யுபகாரத்தை அபே க்ஷித்துத் தேவரீர் இவற்றைக் கொடுப்பதில் லையே.

'दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद्दानं सात्त्विकं स्मृतम्' ॥

என்று புகழப்பட்ட ஸாத்விக தானமான வெ றும் தர்மமேயன்றோ தேவர் செய்து வருவது, என்ற இக்கருத்தை 'அறம் செய்யும்' என்ற விதனால் குறிப்பிட்டாள்.

உலகத்திலுள்ள மற்ற உதாரர்கள் செய்யும் தானமெல்லாம் வஸ்த்ரம் சோறு தண்ணீர் என்ற இவைபோன்ற வஸ்துக்களோடுநிற்கும். அப்படியன்றே எம்பெருமானுக்குப்பிதாவான தேவரீருடைய தானம். இத்தனைக் காலமாக தேவரீர் செய்து வந்த தானமெல்லாம் மேலே செய்யவேண்டிய ஒரு பெரிய தானத்திற்கு அப்யாஸமாகச் செய்ததே. அந்தந்த வஸ்துக் களைக் கொடுத்துக்கொடுத்துச்செய்த பயிற்சிக் கெல்லாம் பலன் இப்பொழுது செய்யவேண் டிய பெருந்தானமே. தேவரீர் பிதாவாய் நின்று அருமையாய் வளர்த்து வரும் ஸ்ரீ க்ருஷ்ணனை எங்கள் போன்றவர் அபேக்ஷித்த போது கொடுப்பதே அந்த முடிவான தானம்.

'தருகை நீண்ட தசரதன் தான் தரும்
இருகை வேழத் திராகவன்'

என்பர். தசரதசக்ரவர்த்தி தானம் பண் ணிக்கொண்டே வந்தார். அவருடைய தருகை அதாவது தானம், அல்லது தருகின்ற கை நீண்டு கொண்டே வந்தது. கடைசியில் அது எங்கே முடிந்தது? இருகை வேழம் போன்ற இராகவனை உலகுக்கு உபயோகப்படும்படி தருவதில் முடிந்தது. அவ்விதம் தேவரீரு டைய தானமும் ஸ்ரீ க்ருஷ்ணனை உலகுக்கு உபயோகப்படும்படித் தருவதில் முடியவேண் டும். ஆகையால் எழுந்திருந்து அவ்வாறு க்ருபை பண்ணவேண்டு மென்றாள்.

(தொடரும்)

ஸ்ரீ:

யக்ஷப்ரச்னம்

மஹாபாரதத்தில் ஆரண்ய பர்வத்தில்— யமன் தர்மபுத்திரரை பரீக்ஷிப்பதற்காக யக்ஷரூபத்துடன் தோன்றி, தர்மபுத்திரரை சிலகேள்விகளைக்கேட்டு அவரை தர்மத்தின்நெறி தவராதவரென நிச்சயித்துக்கொள்ளுகிறான். அப்பொழுது இருவருக்கும் நடந்த ஸம்பாஷணத்தை விஷயமாகக்கொண்டது இவ்வ்யாஸம்.

தர்மபுத்திரர், தன் தம்பிகளுடன் ‘த்வைதம்’ என்கிற காட்டில்வாஸம்செய்யும்பொழுது அக்நிஹோத்ரியான ஒரு ப்ராஹ்மணன் தர்மபுத்திரரிடம்வந்து ‘நான் தினமும் அக்நிஹோத்ரம்செய்து வருகிறவன். அந்த யாகத்தில் உபயோகப்படக்கூடியதாயும் அரணிக் கட்டையுடன் கூடியதுமான பாண்டம் ஒன்றை நான் வாஸம் செய்கிற இடத்திலுள்ள ஒரு மரத்தில் மாட்டி வைத்திருந்தேன். இன்று அவ்வழியே சென்ற ஒரு ம்ருகம் தன் தினவை போக்கிக்கொள்ள பாண்டம் மாட்டியிருந்த மரத்தில் உராயவே என் பாண்டம் அதின் கொம்பில் மாட்டிக்கொண்டது. அதை எடுப்பதற்காக அதனருகில் நான் வருவதைக் கண்ட ம்ருகம் ஓட நானும் அதைப் பின்தொடர்ந்து சென்றேன். அந்த ம்ருகம் மிக வேகமாகச் சென்று அருகிலுள்ள தோப்பில் மறைந்தது. ஆசையால் தேவரீர் அந்த ம்ருகத்தை பிடித்து என் பாண்டத்தை மீட்டுத் தரவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். இதை நீர் செய்தீராகில் என் அக்நிஹோத்ரம் நாசமடையாமல் இருக்கும்’ என்று முறையிட்டுக்கொண்டான்.

உடனே தருமபுத்திரரும் தம்பிகளுடன் ம்ருகம் சென்ற வழியே அக்காட்டில் சென்று அதைத் தேடினார். வெகு நேரம் தேடியும் ம்ருகம் கிடைக்கவில்லை. தம்பிகளோ களைப்படைந்தார்கள். மேலும் தாகத்தினால் பீடிக்கப்பட்டவர்களாய் ‘ஹாஹா’ என்று தவித்தார்கள். அதைப் பார்த்த தருமபுத்திரர் நகுலனை யழைத்து ‘நகுல! ஸமீபத்தில் ஏதாவது குளம் இருக்கிறதா? இந்த மரத்தின் மீதேறிப் பார்’ என்று கட்டளையிட்டார்.

பிறகு நகுலன் தமயன் நியமனப்படி மரத்தின் மீதேறிப் பார்த்து ஸமீபத்தில் ஜலமுள்ள குளம் இருப்பதாகச் சொன்னான். அதைக் கேட்ட தருமபுத்திரர் ‘நகுல நீ அங்கு சென்று உன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு எங்களுக்கும் ஜலம்கொண்டுவா’ என்று நியமித்தார்.

நகுலனும் அவர் உத்திரவுப்படி அந்தக் குளத்திற்குச் சென்று அங்கு ஜலத்தைக் கண்டு ஆநந்த பரவசனாய் ஸாப்பிட ஆரம்பிக்கும் ஸமடத்தில் ஆகாயத்தில் ஒரு குரல் கேட்டது. அதாவது—‘ஏ மாத்ரியின் பிள்ளையான நகுலனே! இந்த குளம் என்னுடையது. ஆகையால் உனக்குத் தீர்த்தம் வேண்டுமாகில் என்னுடைய வினாக்களுக்கு பதில் சொல்லிவிட்டு தீர்த்தம் ஸாப்பிடு; உன் தமயன்மார்களுக்கும் எடுத்துக்கொண்டுபோ. என் வினாக்களுக்கு பதில் சொல்லாமல் இந்த குளத்தின் ஜலத்தை ஸாப்பிடுவாயாகில் உன் உயிரைத் துறக்க நேரிடும்’ என்று. நகுலனோ தாகத்தின் கொடுமையால் அந்த அசரீரிவார்த்தையை லக்ஷ்யம் செய்யாமல் அக்குளத்தின் ஜலத்தை ஸாப்பிட, உடனே மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான்.

தருமபுத்திரரும், நகுலன் சென்று வெகு நேரமாகியும் வாராததால் சகிதராய் ஸஹதேவனைக் கூப்பிட்டு ‘நீ அங்குப் போய் பார்த்து அவனை அழைத்துக்கொண்டு தீர்த்தமும் கொண்டுவா’ என்று நியமித்தார். ஸஹதேவனும் அப்படியே அங்கு சென்றுப் பார்த்ததில் நகுலன் மூர்ச்சையடைந்து கீழ் படுத்திருப்பதைக் கண்டு மனம் கலங்கினவனாய் அதிக தாகத்தின் பயனாக ஜலத்தை ஸாப்பிட ஆரம்பிக்க, முன் போலவே அசரீரியினால் தடுக்கப்பட்டும் தாகத்தின் கொடுமையால் ஜலத்தை ஸாப்பிட்டு மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். தருமபுத்திரரும், ஸஹதேவன் சென்று வெகு நேரமாகியும் அவன் வாராமையைக் கண்டு வருந்தி அர்ஜுனன் பீமன் இவர்கள் இருவரையும் அனுப்பினார்.

அர்ஜுனன் அங்கு சென்று அங்கு தன் தம்பிகள் மூர்ச்சையடைந்து கீழேவிழுவதற்கு காரணத்தை அறிய ஆவலுள்ளவனாய் அக்குளத்தின் நாலா பக்கங்களிலும் தேடி அலைந்து பார்க்க, அங்கு ஒருவரும் காணாமையாலே, அவன் தாக சாந்தியின் பொருட்டு தீர்த்தத்தை ஸாப்பிட ஆரம்பித்தான். அப்பொழுது முன்போலவே அசரீரிவாக்கு அவனைத் தடுக்க, அவன் ஶப்தம்வரும் திக்கை நோக்கி பாணங்களைப் பொழிந்தான். அதற்குப் பிறகு ஒருவரும் சண்டைக்கு வாராமல் போகவே அக்குளத்தின் ஜலத்தை ஸாப்பிட்டு மூர்ச்சையடைந்தான்.

பிறகு பீமஸேனன் அர்ஜுனன் வாராததால் சங்கிதனாய் அங்கு சென்று பார்த்ததில் மஹாவ்யாபகனாயும் ஸவ்யஸாசியுமான (இரண்டு கைகளாலும் அம்பு எறியக்கூடிய தன்மை வாய்ந்தவன்) அர்ஜுனனின் மூர்ச்சாவஸ்தையைக் கண்டு கலங்கினவனாய், இங்கு ஏதோ சூழ்ச்சியிருக்கிறது 'யுத்தம் செய்துதான் ஆகவேண்டும், தீர்த்தம் ஸாப்பிட்டால்தான் யுத்தம் செய்யமுடியும்' என்கிற எண்ணத்தினால் தீர்த்தத்தை ஸாப்பிட ஆரம்பித்தான். முன்போலவே இவனையும் அசரீரி தடுக்க அதை அனாதரித்து ஜலத்தை ஸாப்பிட்டு மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தான்.

பிறகு தர்மபுத்திரரும், தம்பிகள் ஒருவர் பின் ஒருவராக சென்று வெகு நேரமாகியும் திரும்பி வாராமல் போகவே சகிதராய் அங்கு சென்று குளத்தின் கரையில் ம்ருதப்ராயர்களான தம்பிகளைப் பார்த்து மிகவும் சோகத்தினால் பீடிக்கப்பட்டவராய் இவர்கள் மூர்ச்சையடைந்திருப்பதின் காரணத்தை சிந்தித்து கடைசியில் 'இந்த ஜலத்தில் விஷம்கலந்திருக்க வேண்டும், அதனால் இவர்கள் இம்மாதிரியாயினர்' என்ற முடிவுக்கு வந்து, ஜலத்தைக் கையினால் எடுத்தார். அப்பொழுது முன்போலவே, 'ஹே தர்மபுத்திரரே! என் கேள்விகளுக்கு பதில்சொல்லாமல் இந்தஜலத்தை ஸாப்பிடுவீராகில், நீரும் தம்பிகளின்கதியையடைய நேரிடும்' என்று அசரீரிவாக் சொல்லிற்று.

உடனே தர்மபுத்திரரும் நாலாபக்கமும் பார்க்க ஒருவரும் காணாமல் போகவே மறுபடியும் ஜலத்தைத் தொட உடனே ஒரு உருவம், ஒரு ச்லோகத்தைச் சொல்லிக்கொண்டே

'यक्षोहमस्मि भद्रं ते नास्मि पक्षी जलेचरः ।
मयैते निहतास्सर्वे भ्रातरस्ते महौजसः ॥'

[நான் ஜலத்தில் ஸஞ்சரிக்கும் பக்ஷி யல்ல; (கொக்கல்ல.) யக்ஷ குலத்தைச் சேர்ந்தவன். என்னால்தான் மிக பராக்ரமசாலிகளான உம் தம்பிகள் கொல்லப்பட்டார்கள். கோபிக்காதே. உனக்கு மங்களம் உண்டாகட்டும்.] எதிரில் தோன்றிற்று.

தருமபுத்திரரும் அந்த பயங்கரமான உருவத்தைக்கண்டு பயந்தவராய் 'இந்த குளம் உம்முடையது என்று எனக்குத் தெரியாது' என்று சொல்லிக்கொண்டே அதின் அருகில் சென்றார்.

அந்த உருவம் தருமபுத்திரரைப் பார்த்து (அந்த உருவம்தான் யக்ஷன்) 'தர்மிஷ்டரே, என்னால்தான் உம் தம்பிகள் இக்கதியையடைந்தார்கள். 'என் வினாக்களுக்கு பதில் கூறாமல் இந்த ஜலத்தை ஸாப்பிடவேண்டாம்' என்று தடுத்தும் என் வார்த்தையைக் கேட்காமல் இந்த ஜலத்தை ஸாப்பிட்டு இக்கதியையடைந்தார்கள் நீராவது என்னுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு ஜலத்தைஸாப்பிடுவீராக' என்று சொல்லிற்று. யுதிஷ்டிரரும் 'எனக்கு தெரிந்தவரை சொல்லுகிறேன் கேட்பீராக' என்று பதிலுரைத்தார்.

கேள்விகள் பின் வருமாறு

யக்ஷன்—எது ஸூர்யனை உதிக்கச் செய்கிறது? எவைகள் ஸூர்யனுக்கு நாலாபக்கங்களில்ஸஹாயமாக ஸஞ்சரிக்கின்றன? எவன் ஸூர்யனை அஸ்தமிக்கும்படி செய்கிறான்? ஸூர்யன் எங்கே ஸ்திரமாக இருக்கிறான்?

தருமபுத்திரர்—பர ப்ரஹ்மம்தான் ஸூர்யனை உதிக்கும்படி செய்கிறது. ஸூர்யனுக்கு நான்கு பக்கங்களிலும் வேதங்கள் ஸஞ்சரிக்கின்றன. தர்மம்தான் ஸூர்யனை அஸ்தமிக்கும்படி செய்கிறது. ஸத்ய ஶப்தத்தினால் சொல்லப்படுகிற பரமாத்மாவினிடத்தில் ஸ்திரமாக இருக்கிறான்.

யக்ஷன்—எதனால் ப்ராஹ்மணன் ச்ரோத்திரியனாகிறான்? எதனால் உயர்ந்த ஸ்தானத்தை

அடைகிறான்? எதனால் ஸஹாயம் உள்ளவனாகிறான்? எதனால் புத்திமானாகிறான்?

தருமபுத்திரர்— ப்ராஹ்மணன் வேதங்களையும் அதன் அர்த்தங்களையும் ஆசார்யன் மூலமாகத் தெரிந்து கொண்டால் ச்ரோத்ரியனாகிறான். (ச்ரோத்திரியன் சுருத வேதாந்தன்) தபஸ்ஸினால் (தப ஆலோசநே என்கிற தாதுவினால் தபஸ் என்பது த்யானம்) பரமாத்மவிஷயக த்யாநத்தினால் உயர்ந்த பதத்தை அடைகிறான். தைர்யத்தினால் ஸஹாயம் உள்ளவனாகிறான். பெரியோர்களை அடிபணிவதால் புத்திமானாகிறான்.

யக்ஷன்—ப்ராஹ்மணனுக்கு ப்ரகாசகமான தர்மம் எது? இவர்களுக்கும் ப்ராஹ்மணரல்லாதவர்களிலுள்ள ஸத்புருஷர்களுக்கும் ஸமமான தர்மம் எது? ப்ராஹ்மணர்களுக்கு மனுஷ்ய தர்மம் என்ன? இவர்களுக்கும் அஸத் புருஷர்களுக்கும் ஸமமான அச்சம் எது?

தருமபுத்திரர்—ப்ராஹ்மணர்களுக்கு ப்ரகாசகமான தர்மம், வேதாத்யயனம் பண்ணி அதை தரிப்பது. இவர்களுக்கும் ஸத்புருஷர்களுக்கும் ஸமமான தர்மம் தபஸ் செய்வது. (தபஸ் த்யாநம்) ப்ராஹ்மணர்களுக்கு மனுஷ்ய தர்மம் மரணமடைவது. அஸத்புருஷர்களுக்கும் இவர்களுக்கும் (அபவாதம் கேட்பது) கோள் சொல்லுக்கு விஷயமாக இருப்பது ஸமமான தர்மம்.

யக்ஷன்—நெல் முதலிய விதை விதைப்பவர்களுக்கு எது ச்ரேஷ்டமானது? தர்ப்பணம் (தேவரிஷி பித்ரு தர்ப்பணம்) செய்கிறவனுக்கு எது விரும்பத்தக்கின ச்ரேஷ்டமான வஸ்து? கால்நடைகளுக்குள் எது ச்ரேஷ்டமானது? பேச்சாளர்களுக்குள் எவன் உயர்ந்தவன்?

தருமபுத்திரர்—நெல் முதலிய விதை விதைப்பவர்களுக்கு மழை ச்ரேஷ்டமானது. தர்ப்பணம் செய்கிறவர்களுக்கு தன் குல ஸந்ததி ச்ரேஷ்டமான வஸ்து. கால்நடைகளுக்குள் பசுக்கள் ச்ரேஷ்டமானவை. பேச்சாளிகளுக்குள் புத்திரன் உயர்ந்தவன்.

யக்ஷன்—எவன் புத்திமானும் ஸர்வ பூதங்களுக்கு இஷ்டமானவனும் இந்திரியாதி சுகங்களையநுபவித்துக்கொண்டு இருந்தபோதிலும் ஜீவித்திருப்பவனாக ஆகமாட்டான்?

தருமபுத்திரர்—தைவதம், அதிதிகள், வேலைக்காரர்கள், தாய் தகப்பன்மார்கள் இவ்வைவரையும் எவன் திருப்தி செய்யவில்லையோ அவன் உச்ச்வஸித்துக்கொண்டிருந்தபோதிலும்ஜீவித்திருக்கிறவனாக ஆகமாட்டான்.

யக்ஷன்—பூமியைக்காட்டிலும் எதுபெரியது? ஆகாயத்தைக்காட்டிலும் எதுஉயர்ந்தது? எது வாயுவைக்காட்டிலும் வேகத்தை உடையது? மனிதர்களுக்கு எது பெரியதாகக் கருதக்கூடியது?

தருமபுத்திரர்—பூமியைக்காட்டிலும் பெரியவள் தாய். ஆகாயத்தைக்காட்டிலும் உயர்ந்தவன் தகப்பன். வாயுவைக்காட்டிலும் பெரியது மனது. மனிதன் பெரியதாகக் கருதக்கூடியது சிந்தை.

யக்ஷன்—எது தூங்குகிறபோதுகூட கண்களை மூடுவதில்லை? அசைவதில்லை? எது உண்டானவுடனே (பிறந்தவுடனே) அசைவதில்லை? எதுக்கு ஹ்ருதயம் இல்லை? எது வேகத்தினால் வ்ருத்தியை அடையும்?

தருமபுத்திரர்—மீன் தூங்கும்பொழுதுகூட கண்களை மூடுவதில்லை. முட்டைகளிலிருந்து பக்ஷிகள் பிறந்த உடனே அசைவதில்லை. கல்லுக்கு ஹ்ருதயம் கிடையாது. (ஆகையால் தான் உலகில் தயையில்லாதவனை கல்நெஞ்சன் என்று ஜனங்கள் வ்யவஹரிக்கிறார்கள். அங்கும் அவனுக்கு ஹ்ருதயமே இல்லை என்பதிலியே நோக்கு.) ஆறு (நதி) வேகத்தினால் வ்ருத்தி அடையும்.

யக்ஷன்—எது வெளியூர்களில் வாஸம் செய்கிறவனுக்குத் தோழன்? எது வீட்டில் இருப்பவனுக்குத் தோழன்? வ்யாதியினால் பீடிக்கப்பட்டவனுக்கு எவன் தோழன்? இறப்பவனுக்கு எது தோழன்?

தருமபுத்திரர்—வெளியூர்களில் வாஸம் செய்பவனுக்கு வித்யை தோழன். வீட்டில் இருப்பவனுக்கு பத்நி தோழன். வியாதிஸ்தனுக்கு வைத்யன் தோழன். இறப்பவனுக்கு

தானம் தோழன்.

யக்ஷன்—எல்லா பூதங்களுக்கும் எவன் அதிதி யாவான்? எது அநாதியான (நித்யமான) தர்மம்? அமிருதம் என்பது எது?

தருமபுத்திரர்—அக்நிதான் எல்லா பூதங்களுக்கும் அதிதி. மோக்ஷம்தான் நித்யமான தர்மம். அமிருத கிரணனுன சந்திரன்தான் அமிருதம்.

யக்ஷன்—எவன் ஒருவனுகவே ஸஞ்சரிக்கிருன்? எவன் அடிக்கடி பிறக்கிருன்? பனிக்கு மருந்து எது? விதை விதைப்பதற்கு எது பெரிய ஸ்தலம்?

தருமபுத்திரர்—ஸூர்யன் ஒருவனுகவே ஸஞ்சரிக்கிருன். சந்திரன் அடிக்கடி பிறக்கிருன். அக்நிதான் பனிக்கு மருந்து. விதைக்கக்கூடிய ஸ்தலம் பூமி.

பரமாத்மபரமாக மேலே குறிப்பிட்ட கேள்விக்கு பதில் சொல்லலாம். ஸூர்யன் போல எல்லாவற்றையும் ப்ரகாசிப்பிக்கிற பரமாத்மா ஒருவனுகவே எல்லா உலகத்தையும் வ்யாபித்து இருக்கிருன். பரமாத்மாதீன ப்ரகாசனுன ஜீவன் (சந்திரன் என்பது ஜீவனைக் குறிக்கிறது.) அடிக்கடி பிறக்கிருன். அதாவது—தேவ மனுஷ்யாதி சரீரங்களைப் பற்றுகிருன். ஹிமம் என்பது ஸம்ஸாரத்தைக் குறிக்கிறது. (ஸம்ஸாரம் ஹிம்ஸா நிமித்தகமாகையால்) ஸம்ஸாரத்துக்கு அக்நி யோகம் மருந்து. பூமி என்பது சரீரத்தைச் சொல்லுகிறது. சரீரம் எல்லோருக்கும் (ஆவபநம்) சுபாசுப கர்மாக்களுக்கு ஸ்தானம்.

யக்ஷன்—மனுஷ்யனுக்கு ஆத்மா என்பது எது? மனுஷ்யனுக்கு தைவத்தினுல் ஏற்படுத்தப் பட்ட தோழன் யார்? இவனுக்கு ஜீவன ஸாதகம் எது? இவனுக்கு எது பராயணம்?

தருமபுத்திரர் — மனுஷ்யனுக்கு புத்திரன் ஆத்மா. 'आत्मा वै पुत्र नामासीति श्रुतेः' பத்நீதான் தைவத்தினுல் ஏற்படுத்தப்பட்ட ஸகா. இவனுக்கு ஜீவனஸ்தானம் மேக வர்ஷம். இவனுக்கு தானம் நல்ல கதியை அடைய காரணமாகும்.

யக்ஷன்—தான்ய ஸாதனங்களுக்குள் எது உத்தமம்? தனப்ராப்தி ஸாதனங்களுக்குள் எது உத்தமம்? லாபங்களுக்குள் உத்தமம் எது? ஸுகங்களுக்குள் எது உத்தமம்?

தருமபுத்திரர்—தான்ய ஸாதனங்களுக்குள் உத்தமம் ஸாமர்த்யசாலித்வம். (ஸமர்த்தனுக இருத்தல்.) தன ஸாதனங்களுக்குள் வேதாந்த வித்யை உத்தமம். லாபங்களுக்குள் ச்ரேயஸ் (மோக்ஷமடைதல்) உத்தமம். ஸுகங்களுக்குள் ஸந்தோஷம்தான் உயர்ந்தது.

யக்ஷன்—எது தர்மத்தைக்காட்டிலும் உலகத்தில் உயர்ந்தது? எந்த தர்மம் ஸதா (எப்பொழுதும்) பலத்தைக் கொடுக்கக்கூடியது? எதை அடக்கினுல் மனுஷ்யர்கள் சோகிக்க மாட்டார்கள்? எவர்களின்சேர்க்கை(ஸ்நேஹம்) நாசமடையாது?

தருமபுத்திரர்—க்ரூரனுக யில்லாமல் இருப்பது உயர்ந்த தர்மம். வேதாத்பயநம் தர்மம்; எப்பொழுதும் பலத்தைக் கொடுக்கூடியது. மனிதர்கள்மனத்தை அடக்கினுல்சோகிக்கமாட்டார்கள். ஸத்புருஷர்களுடன் சேர்க்கை (ஸ்நேஹம்) நாசமடையாது.

யக்ஷன்—எதை விட்டால் மனிதன் எல்லோருக்கும் வேண்டியவனுவான்? எதை விட்டால் சோகிக்க மாட்டான்? எதை விட்டால் தனமுள்ளவனுவான்? எதைவிட்டால் ஸுகியாவான்?

தருமபுத்திரர்—மனிதன் கர்வத்தைவிட்டால் எல்லோருக்கும் ப்ரியமாவான். கோபத்தை விட்டுவிட்டால் சோகிக்கமாட்டான். காமங்களை விட்டால் தனவானுவான். லோபத்தை விட்டால் ஸுகியாவான்.

யக்ஷன்—உலகில் ஜனங்கள் ப்ராஹ்மணனிடத்தில் தானம் செய்வது எந்த ப்ரயோஜனத்தைப் பொருத்தது? நடநர்த்தகாதி புருஷனிடத்தில் தானம் செய்வது எந்த ப்ரயோஜனத்தைக்கொண்டது? வேலைக்காரனிடத்தில் தாநம் கொடுப்பது எதற்காக? ராஜாவினிடத்தில் தானம் கொடுப்பது எதற்காக?

தருமபுத்திரர்—ப்ராஹ்மணனிடத்தில் தாநம் செய்வது தர்மத்திற்காக. நாட்யம் ஆடுகிறவர்களிடத்தில் தாநம் கொடுப்பது கீர்த்திக்காக.

(தொடரும்)

ஸ்ரீ:

அருளிச் செயல்கள்

ஆழ்வார்கள் ஸாதித்துள்ள பாசுரங்களுக்கு அருளிச்செயல்களென்று ஸம்ப்ரதாயப் பெயர்.

'வேதம் அருள் சுரந்தறைந்த நீதித்திறந்தேரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தி'

(கம்பரா— சுந்தர்கா—பிணி வீட்டுப்படலம் 81) என்று ஹநுமானவதாரதாத்பர்யத்தைச்சொல்லுகிறான். வேதபுருஷன் அருளினுடைய மிகுதியாலும், பரீவாஹத்தாலும் நீதிகளைச் சுரந்து உலகத்துக்குக்கறந்து கொடுத்தான். அவைகளின்படி உலகத்தோர் ஒழுகினால், அவர்கள் வாழ்க்கை தமக்கும், பிறருக்கும் நன்றாகி அவ்விதம் வாழ்வோர் உயர்கதிகளடைவதற்கும் காரணமாகும். வேதம் இந்த நீதிகளை எடுத்துக் கூறுவதற்கு அருள் மிகுதியே அடிப்படையான காரணம். 'அறைந்த நீதி' என்பதால் அது கேவலம் ஶப்தரூபமாய் நிற்றலால் ஶாப்த ப்ரமாணம் என்று பெயர் பெற்றது. உலக வாழ்க்கையின் நலனுக்கும் பரலோகஸாதனமாகவும் பல்வேறுதேசகாலங்களிலும் பல பெரியோர்கள் வகுத்திருக்கும் நீதிகளோடொப்பிட்டுப்பார்க்க, வேதம்கூறும் வழியின் மேன்மையான திறம் உணரக்கிடக்கிறதென்பது தோன்றத் 'திறன் தெரிந்து' என்றார். இதை உணர்ந்தபின் இந்த வாழ்க்கை வழியைப் 'பூண' வேண்டுமென்கிறார். இது தர்ம ஶப்தத்துக்கு 'தார்யதே'என்னும் வ்யுத்பத்திப் பொருள். இந்த நீதிகளைக் காட்டிலும் நாம் அணிந்து கொள்ளக்கூடிய உயர்ந்த பொருள் வேறொன்றில்லை என்கிற மனத்தீர்மானத்துடனும், உள்ளன்புடனும் இவைகளைப் பூண்டு ஒழுகவேணும். இப்படிப் பூண்டொழுகுவது நல்ல வழியில் வாழ்தலாதலின், இதை அறிவித்து வாழ்க்கைத்திறனைச் செம்மையுடையதாக்கித் தருதலைச் 'செந்நெறி செலுத்தி' என்றார். அருள் மிகுதியால் வேதம் மனிதனுடைய வாழ்க்கை நல்வாழ்க்கையாவதற்கு அநுஷ்டிக்கவேண்டிய விதிகளையும், விடவேண்டிய நிஷேதங்களையும் வகுத்துக் கூறுகிறது. அவைகளின் அருமை பெருமைகளை உணர்ந்து மனிதன் அவைகளைத் தனக்கு இன்றியமையாத உயிர்ச் செல்வங்களாகப் பூண்டு தன் வாழ்க்கையை அந்த வழியில் நடத்த வேணும். இவ்வித நல்வழியில் மனிதன் வாழ்க்கையைத் திருப்புவதே ராமாவதாரத்தின் நோக்கம். இந்த அவதாரத்துக்கும் பகவான் உலகத்தோரிடத்தே கொண்டுள்ள அருளே காரணமென்பதும் தாத்பர்யம். இதையே 'கருணா காகுத்ஸ்த' என்னும் ப்ரயோகத்தால் ஸ்ரீதேசிகன் விளக்கியுள்ளார்.

(2) பகவத் ஸ்வரூப குணங்களில் ஆழங்கால் பட்டு அவைகளில் மூழ்கி ஆழ்ந்தநுபவித்த ஆழ்வார்களும் பகவானுடைய அருள் சுரந்து அது காரணமாக உலகத்தோர் நல்வழியில் ஒழுகி இங்கே நடத்தும் வாழ்க்கை நல்லதாகவும் பிற்பயக்கும் பயனும் உத்தம லோகங்களுக்கு இவர்களை நடத்திச் செல்லக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்னும் கருத்துடன் பொதிந்த தத்தம் அநுபவங்களை வெளியிடும் பாசுரங்களாதலின் அவைகளுக்கு அருளிச் செயல்களென்றும் பெயர் நன்கு பொருந்துவது. இந்தப் பாசுரங்கள் ஶப்தரூபமாயிருப்பதையிட்டு அருள் மொழிகளென்று பெயரிடாமல் செயல்களென்றது. இந்தப் பாசுரங்களைத் தம்செயல்களாகவே ஆழ்வார்கள் கருதினர்கள் என்பதுடன் அவர்களுடைய அநுபவங்களால் அவர்களுக்கு உலகத்திலேற்பட்ட அநுஷ்டானங்கள் இப்பாசுரங்களில் விவரிக்கப் படுகின்றனவென்பதும் இவைகளைக் கற்போர் இவைகளைக் கேவலம் ஶாப்த ப்ரமாணமாக மட்டும் கொள்ளாமல் அநுஷ்டான க்ரமங்களாகவே க்ரஹித்துணர்ந்து கைக்கொண்டு ஒழுக வேணும் என்னும் பொருள்படச் செயல்' என்றது.

(3) இனி அருளிச்செயல்கள் எவ்விதம் நம்மை ஈடுபடுத்துகின்றன என்பது ஆராயவேண்டியது. ஆழ்வார்கள் திவ்ய தேசங்களில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மூர்த்திகளையே தங்கள் பாசுரங்களின் லக்ஷ்ய வஸ்துக்களாகக் கொண்டு பாடுகிறார்கள். பகவானுடைய குணரூப சேஷ்டிதங்களை இவர்கள் அநுபவித்த அநுபவங்களே இந்தப்பாசுரங்களில் துலங்குகின்றன. சில இடங்களில் ஸ்வாபதேசத்திலும் பொருள்கொள்ளவேண்டியன. அவைகளைப் பொருளுணர்ந்து கற்றல் ஆழ்ந்த

மனச் செயலாகவும் அந்த அநுபவத்தோடு ஸேவித்தல் வாசிகச் செயலாகவும் ஆவன. இவைகளுக்குமேல் மூன்று படிகளில் நாம் காயிகமான செயலுடையவர்களாயிருக்க வேண்டுமென்பது ஆழ்வார்கள் திருவுள்ளம்.

(1) திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுடைய திவ்ய மங்கள விக்ரஹங்களைச் சென்று ஸேவித்து அந்த விக்ரஹங்களில் ஸாக்ஷாத் பகவானையும் அவனுடைய ஸ்வரூபகுண சேஷ்டிதங்களையும் சாற்றியுணர்ந்து அநுபவித்தல் இதைத்தான் சாற்றுமுறை யென்பர்.

இதைத் திருமங்கை மன்னன்—

'ஏதம் வந்தணுகாவண்ண நாமெண்ணி
எழுமினோதொழுது மென்றிமையோர்
நாதன் வந்திறைஞ்சும் நைமிசாரணியத்
தேந்தையை' என்கிறார்.
(பெரிய திருமொழி 1-6-10)

மூன்று லோகங்களுக்கும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தனியரசனாய் ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு அடுத்த அந்தஸ்தில் இருக்கும் இந்த்ரன் தன்னுடைய நித்ய வாழ்க்கையில் பாபதோஷங்கள் வந்து கலந்து விடாமலிருப்பதற்குத் தன் பரிவாரங்களோடு அர்ச்சையிலீடுபட்டு ஸேவித்துக் கொண்டிருப்பானானால் நாமெல்லாம் அந்த ஸேவநத்தில் எவ்வளவு ஈடுபடவேண்டுமென்பதை உணருமாறு வற்புறுத்துகிறார்.

(2) இனிக் குலசேகரப் பெருமாள் இன்னும் ஒரு படிமேலே சொல்கிறார்—

'எம்பெருமான் தன் சரிதை செவியாற்கண்
ணாற் பருகுவோமின்னமுதமதியோமன்றே'
(பெருமாள் திருமொழி 10-8)

பரமஸாதுக்களைக்கொண்டு ராம க்ருஷ்ணாதிகள் சரித்ரங்களையெல்லாம் நாடகமேடையில் தகுந்தபடியாக நடிக்கச்செய்து இவைகளையெல்லாம் கண்ணாலும் பருக (குடிக்க) வேண்டுமென்கிறார். அரசுச் செல்வத்திற் பிறந்து வைதிகச் செல்வத்தில் வளர்ந்து ஸாது ஸ்ரீ வைஷ்ணவர்கள் கோஷ்டிகளைக்கூட்டி அவைகளின் நடுவே ராமசரிதம் முதலான பகவச்சரிதங்களைக்கேட்டு அவைகளில் மெய்ப்பாட்டு அடைந்தவராதலின் இங்ஙனம் அநுபவபரீவாஹத்தை விளக்குகிறார். இவர் திருச்சித்ரகூடத்தில் இவ்விதம் ராம கதையை நாடகமாக நடித்துக் கண்டு களித்து அதன் பரீவாஹமாக ஸம்பூர்ண ராமாயணத்தைத்தான் மேடையில் கண்டதையும் சேர்த்து 10ம் திருமொழியாகப் பாடியருளி 'நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணினார்' என்று பொருள் கொள்ளினும் பொருந்தும்.

(3) துளஸித்தோட்டத்தில்கிடைத்த பெண்ணையெடுத்து வளர்த்து ஸ்ரீ ரங்கமன்னாருக்கு மணம் புரிவித்த இவருடைய பரத்வ நிர்ணயத்தில் மிகவும் மனமுவந்து இவருக்குஸேவை ஸாதித்து அநுக்ரஹிக்கவேணுமென்று ஆர்வங்கொண்டு வந்த வைகுண்டபதிக்குத்தான் பல்லாண்டுபாடி வாழ்த்தியனுப்பிய பெரியாழ்வாருக்கு இந்தப்படியும் போதவில்லை. நாம் ஒவ்வொருவருமே பகவத்கதாபாத்ரங்களாகப் பல வேஷங்களையும் போட்டுக்கொண்டு ஆடிப் பழகவேண்டுமென்கிறார்.

'குருந்தமொன்றொசித்தானொடுஞ் சென்றுகூடி
யாடிவிழாச்செய்து திரிந்துநான் மறையோரி
ராப்பகலேத்தி வாழ் திருக்கோட்டியூர்'
(பெரியாழ்வார் திருமொழி 4-4-7)

திருக்கோட்டியூர் அக்ரஹாரங்களில் வஸிக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நான்கு வேதங்களையும் அவைகளின் ஆறு அங்கங்களையும் கற்று ஸம்பூர்ண வேதார்த்த ஜ்ஞான முடையவர்களாய் விளங்குகிறார்கள். ஆனால் பகவத்ப்ராப்திக்கு அடிப்படையான, அஹங்கார மமகாரங்களைப் போக்குதல் சேஷத்வ பாரதந்த்ர்ய கைங்கர்ய புத்திகளை யடைதல் ஆளும் பயனுமாக பகவானையே பற்றுதல் முதலான அநுஷ்டானங்கள் (செயல்கள்) அவர்களுக்கு ஸித்திப்பதற்காக, க்ருஷ்ண சரித்ரத்திலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் க்ருஷ்ணனை ப்ரதான பாத்ரமாகக்கொண்டு, தாங்களே வேஷங்கள் போட்டுக் கொண்டும் ஆடி இவைகளையே விழாக்களாகக் கொண்டாடித் தத்தம் வாழ்க்கை நெறியில் திருந்தி நல்வாழ்வு வாழ்கிறார்கள் என்கிறார். 'சென்று கூடி இராப்பகல் ஆடி எத்தி விழாச் செய்து திருந்தும் நான்மறையோர்கள் வாழ் திருக்கோட்டியூர்' மேலே கூறிய ஆறு வினையெச்சங்கள் குறிப்பிடும் செயல்களே இவர்கள் நல்வாழ்க்கைக்கு ஹேதுவாயிருந்தன என்பது தெளிவு. இவ்வித காலக்ஷேபமுள்ளவர்களே ஸ்ரீ வைஷ்ணவ உலகத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறவர்கள்.

(4) இதனடுத்த பாட்டில் செல்வநம்பிகளைக்

(தொடர்ச்சி 210ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

புத்தக விமர்சனம்

[1] 'ஸ்ரீசடகோபமாமுனி அந்தாதி,
திருவிண்ணகர் நம்பி நவரத்னமாலை,
ஸ்ரீசடகோபக்ருத ப்ரபத்தி ஸ்தவம்,
ஸ்ரீவைஷ்ணவ பாததூளி ப்ரபாவம்,
முதலிய ஸ்தோத்ரங்கள்—
இயற்றியவர்—இளையவில்லி ஸ்ரீ. உப. வித்வான்,
ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி
தெலுங்கு பிராமணவீதி,
கோயமுத்தூர்.

இந்த ஸ்தோத்ர பாடல்கள் அந்த ஸ்வாமியின் பக்திப் பெருக்கால் வெளிவந்தவை என நன்கு புலனாகிறது. திருவாய்மொழிப் பாசுரங்களையும், பூர்வாசார்யர்களின் ஸ்தோத்ரங்களையும் அடிப்படையாகக்கொண்டு ஸந்தர்பத்திற்கேற்ப, பகவான் பேரிலும், நம் ஆசார்ய ச்ரேஷ்டரான ஸ்ரீமதழகியசிங்கர் பேரிலும், அந்தப் பாடல்களையும், ஸ்தோத்ரங்களையும் மாற்றி யமைத்திருக்கிறார்.

இந்த ஸ்வாமி பரம பாகவதர் என்பது இந்தஸ்வாமியின் திருமாளிகைக்குச் சென்றவர்களுக்கு நன்கு தெரியும். பகவத் படங்களையும், ஆசார்யர்களின் திருவுருவப்படங்களையும், திருப்பாதுகைகளையும் தம் திருமாளிகையில் வைத்து பூஜிப்பதின் க்ரமமே இந்த ஸ்வாமியின் பக்திக்கு எடுத்துக்காட்டு.

அந்த பக்தியின் நிலை இவருடைய பாடல்களில் நன்கு தெளிவாகின்றன.

[2] 'ந்யாஸ தசகம்'
'ஸ்ரீமஹாலக்ஷ்மி அஷ்டோத்தர சதநாம-ஸ்தோத்ரம்'
ப்ரசுரித்தவர்—ஸ்ரீ. உப. வித்வான் சின்னமுர. ஸ்ரீநிவாஸபாட்டராசார்யர்,
47. பாட்டராசாரியர் தெரு,
திருக்குடந்தை.
(விலை முறையே 4 அணாவும், 6 அணாவும்)

இந்த ஸ்தோத்ரங்கள் க்ரந்தம், நாகரம், தமிழ் இவைகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. தமிழ் பதவுரை, கருத்துரை இவைகளுடன் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன.

இக்காலத்தில் இம்மாதிரியான மலிவான, உபயோகமுள்ள ஸ்தோத்ரங்களின் ப்ரசுரங்கள் மிகவும் அவச்யமானவைகளே. இதே மாதிரி இன்னும் பல ஸ்தோத்ரங்களை இந்த ஸ்வாமி வெளியிட்டால் மிகவும் உபகாரமாக இருக்கும்.

சிலவிடங்களில் பாடபேதங்களும் காணப்படுகின்றன. ப்ராசீன புஸ்தகங்களில் பாடபேதங்களை நாம் செய்யவேண்டி வந்தால் நாம் மிகவும் ஜாக்ரதையுடன் அப்படிச் செய்ய வேண்டும். ஸ்ரீ மஹாலக்ஷ்ம்யஷ்டோத்தர ஸ்தோத்ரத்தில் **'कामाक्षीं क्रोधसंभवां'** என்ற பாடத்தைக் காட்டிலும் **'क्षमां क्षीरोदसंभवां'** என்பது ஸ்ரீஸ்வாமி தேசிகன் முதலிய பூர்வாசார்யர்களுக்கு உவப்பான பாடம் என்று குறிப்பிட்டிருக்கிறார். **'क्रोधसंभवां'** என்ற பாடம் அவ்வளவு உசிதமாகப் படவில்லை என்பது இந்த ஸ்வாமியின் திருவுள்ளம். ஆனால் இதுவரை அந்தப்பாடம் பலவிடங்களில் சொல்லப்பட்டும் வருகிறது. **'नवदुर्गां महाकालीं ब्रह्मविष्णुशिवात्मिकाम्'** என்ற பின்பாடங்களுக்கேற்ப **'क्रोधसंभवां'** என்பது ஏற்கப்பட்டிருந்தும்கூட, எல்லாவுருவங்களுக்குள்ளும் அந்தராத்மாவாயிருந்துவரும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் உண்மை ஸ்வரூபத்தைப்பற்றி **'क्षमां क्षीरोद संभवाम्'** என்பதும்மிகவும்பொருத்தமானதே.

[3] ஸ்ரீஸ்துதி.
ஸ்ரீரகுவீரகத்யம்.
ப்ரசுரகர்த்தா—ஸ்ரீ. உப. வித்வான் வங்கிபுரம்.
தே. ஸ்ரீநிவாஸசார்யர்
'ஸ்ரீ ஸரஸகலா நிலயம்'
31. வடகூர் செல்வவிநாயகர்
கோயில் தெரு
சென்னை 4.
(விலை முறையே 4 அணாவும், 8 அணாவும்)

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனின் அரு

ளிச்செயல்களான இந்த ஸ்தோத்ரங்கள் தேவநாகரிக, தமிழ் முதலிய எழுத்துக்களில் மூலமும், தமிழில் பதவுரை, கருத்துரை இவைகளும் சேர்த்து அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

பக்தியை வளர்ப்பதற்கான பல ஸாதனங்களிலிம்மாதிரியான பக்தியூட்டும் ஸ்தோத்ரங்களை பலருக்கு ஸுலபமாகக் கிடைக்கும்படி செய்வதும் ஒன்று. மிகவும் தெளிவாகவும், ஸுலபமாய் யாவருக்கும் தெரியும்படியும் எழுதிப்ப்ரசுரிப்பதும் உயர்ந்த கைங்கர்யமே. இம்மாதிரியே இந்த ஸ்வாமி இன்னும் பற்பல ஸ்தோத்ரங்களையும் வெளியிடுவார் என்று கேட்டு மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.

நன்கொடை.

(1) திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்க வெளியீடுகள் 56 முதல் 61 வரை நமது புத்தகசாலைக்கு மேற்படி சங்கக் கார்யதர்சி ஸ்ரீ. உப. வித்வான் பந்தல்குடி, பாரத்வாஜ மாடபூசி, ரெ. திருமலை அய்யங்கார் ஸ்வாமியினால் மிக க்ருபையுடன் அனுப்பப்பட்டுள்ளன. அந்த ஸ்வாமிக்கு அடியோங்களுடைய நன்றியை அறிவித்துக்கொள்கிறோம்.

[2] ஸ்ரீ கோதண்டராமன் துதிமாலை.

இயற்றியவர்—ஸ்ரீ. உப. தமிழ் வித்வான்,
திருப்பூந்துருத்தி வி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்,
பழய மாம்பலம்.

பக்தி ஸம்பந்தமான பாடல்களை இயற்றி பலருக்கு உபகரிக்கும் இந்த ஸ்வாமிக்கு எங்களது நன்றி.

(208-வது பக்கத்தின் தொடர்ச்சி)

குறித்துப் பாடுகிறார். ஸர்வலோக சரண்யனுக்குப் பல்லாண்டு பாடும் தன் திருவாயால் செல்வநம்பியைத் 'தெளிந்த செல்வன்' என்கிறார். இதைக் கருதி நோக்கின் இவ்விதம் கண்ணனோடு கூடியாடி விழாச் செய்துதான் திருந்த வேண்டுமென்று செல்வ நம்பிகள் தெளிந்தாரென்றும் அவரால் இந்த விழாச் செய்யும்திட்டம் ஸ்தாபிதமாய் ஆழ்வார் காலத்தில் அநுஷ்டானத்திலிருந்ததை ஆழ்வார் பார்த்துப் பாடியிருக்கிறாரென்றுணர்வதும் நியாயமே. இப்படிகளில் நம்முடைய ஸ்வபாவச் செயல்கள் மட்டும் போதாமல் நம் ஸ்வரூப ஸித்திக்கு நாடகச் செயல்களிலும்கூட அந்வயித்து நம்முடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களைத் திருத்தியமைக்க வழி காட்டும் நூலுக்குச் 'செயல்' நூல் என்று பெயரிட்டது மிகப்பொருத்தமேயாம்.

நம் ஸம்ப்ரதாயத்துக்கு ஸ்ரீ மந்நாதமுனிகள் ஸம்ப்ரதாய மென்று ப்ரஸித்தியாகப் பெயரேற்பட்டுள்ளது. ஸ்ரீ மந்நாதமுனிகள் தன்யோகநிஷ்டையில் ஸாக்ஷாத்கரித்த எல்லா பகவத்குண சேஷ்டிதாநுபவங்களையும் ஆழ்வார் அநுபவித்துப்பாடியுள்ள திருவாய் மொழியிற் கண்டார். அவருக்குண்டான ஆநந்த பரீவாஹம் உடனே செயலில் பர்யவஸாநமடைந்தது. ஸகல ஶாஸ்த்ர விசாரதராய் பரத ஶாஸ்த்ரத்திலும் நாட்ய ஶாஸ்த்ரங்களிலும் கூறும் பாணியும், இசையும், தாளமும் என்ற ஸங்கீதத்தின் மூன்று அங்கங்களோடு தோடு சீர் அடி விழி மனம் கை என்னும் நாட்ய ஶாஸ்த்ரத்தின் ஆறு அங்கங்களையும் சேர்த்துத் தன் திருமேனியே இவைகளுக்கு விளை நிலமாக ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் பட்டுக் குத்திக் குல்லாயணிந்து திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களிலுள்ள பாவங்களையும் தானே ஆடிப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து விழாச் செய்தருளினார். அது இன்றைக்கும் அவர் வழித்தோன்றல்களால் அநுஷ்டிக்கப் பெறுகிறது.

ஆதலால் அருளிச் செயல்களை மநநம் பண்ணுவதும் வாசிகமாகத் தனித்தும் கோஷ்டிகளிலும் ஸேவிப்பதுமான மாநஸிகவாசிகச் செயல்களோடு இந்த்ரன்போல் அர்ச்சா மூர்த்திகளை இடைவிடாது ஸேவித்துக் கொண்டிருத்தலும் குலசேகரப்பெருமான் அநுபவித்தப்ரகாரம் பகவச்சரிதைகளை நாடகமேடைகளில் ஆடக்கண்டு அநுபவிப்பதும் செல்வநம்பிகளால் ப்ரவர்த்திக்கப் பெற்றுத் திருக்கோட்டியூர் அக்ரஹாரவாஸிகள் அநுஷ்டித்து வந்த ப்ரகாரம் நாமே பகவத் கதைகளில் பாத்திரங்களாகப் பங்கெடுத்துக் கொண்டு நடித்தும் திருந்தவேண்டு மென்பதுங்கூட அருளிச் செயல்கள் காட்டிக்கொடுப்பன. அதுவே ஸ்ரீவைஷ்ணவ ஸ்வரூபமாகும். இதில் ஸ்ரீ மந்நாதமுனிகள் ஆழங்காற்பட்டு அநுஷ்டித்தாரென்றால் அவரினும் பெரிய ஸ்ரீ வைஷ்ணவர் யார்?

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(12-வது ஸம்புடம் 8-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இந்த ஸமாதி நிஷ்டை தொடங்கும் ப்ரஹ்மரஸாஸ்வாதியன புருஷனை 'ரஸோவை ஸ:' என்று வர்ணிக்கும் ரஸம் ரஸிக்கத் தக்கது. அந்த ரஸத்தில் 'அவிபாக இன்ப லயத்தை யடைய இவனும் ரஸமே—ரஸமூர்த்தியே. ஆநந்தம் இருவருக்குமொன்றே. அந்த ரஸப்ரஹ்மமே இவனுக்கு ஆநந்த ரஸம். அவனல் இவனுக்கு மற்றோர் ரஸமே யில்லை. 'ஸர்வ ரஸ:' என்பர். அவையெல்லாவற்றையும் தாண்டினது— ஸர்வவிலக்ஷணமானது இந்த ஒன்பதாவது ரஸம். நித்ய நவமான நவரஸம். மற்ற ரஸங்களை அபேக்ஷித்து 'நேதி நேதி' 'நைவம் நைவம்' என்று சொல்லித்தான் இந்த ரஸத்தை ஒருவாறு பேசலாம். ஓர் ரஸம்போலல்ல. மற்றோர் ரஸம் போலல்ல. எல்லா ரஸங்களையும் தாண்டியது. 'ஸதிவ தத்ரோஹ:' என்று தான் பேசலாம். 'இதம் வத்ரோஹ:' என்று பேசவேமுடியாது. 'ஸநிதேர்ஹம் வரஸம் ஸாவம்' என்று கடவல்லீ. மற்ற ரஸமெல்லாம் உணர்ச்சிக்கு விஷயமாகக் கூடியது. இது மநத்திற்கும் எட்டாத ரஸம். மநமொடுங்கினல்தான் கேவலம் ப்ரஹ்மகருணையால் இது அநுபவத்திற்கு வருவது. உத்தரராம சரித்திரத்தில் பவபூதி குசனை வர்ணிக்கையில் 'இவன் வீரரஸமே மூர்த்தீகரித்தவனே' என்று வர்ணித்தார். இந்த ஶாந்தி ரஸத்திற்கு உத்தீபகவிபாவமென்ன? தஸ்வாவஸொ ஸநவிஹாவஸஸ்யிதாதா—ஆத்மா என்பதற்கு 'ரஸஸ்வரூபம்' என்று பொருள். 'தஸ்வாவ ஸொஸநம்' 'தஸ' என்பது ப்ரஹ்மம். 'தஸம்' ப்ரஹ்மாத்மகத்வமான ப்ரஹ்மமயத்வமெனும் உண்மை. 'வெ தஷாதூஷிதம் ஸவஹும் தஸ ஸதூ' என்று ஶாஸ்த்ரம் ஓதும் ஸத்யமான ஸர்வப்ரஹ்மாத்மகத்வமும் தன்னுடைய ப்ரஹ்மாத்மகத்வமும். 'ஒடுங்க அவன் கண்' என்று ஆழ்வார் 'வீடுமின் முற்றவும்' என்னும் உபதேசத் திருவாய்மொழியில் உபதேசித்தபடி. அவனுள் தனிமை நினைப்பில்லாமல் ஒடுங்குவது. 'ஸூதாநா தநயம் யூாயெக' என்று ஏகாதசம். 'வா வாயஹுதிம் ஸமிஷம் ஹவீம வ ஜோதீம்ஷி ஸஙா நிஷிஸொ ஊமாஹீநு। ஸமிதூஷா ஊமஸ ஹரெஸுமீஸ யதிஞ ஹமிதம் வணஜெநது:' என்று ஏகாதசம் காட்டியமுதிர்ந்ததத்வதர்சநநிஷ்டை. 'ஸவ ஹூராதூஹமித வஸோதூவயூதெ வாதூநா ஸஸாநநிஷ்டை' என்று ஶதஷமிஷணீ 36-ம் வாதம் ப்ரஹ்லாத வாமதேவாதிகளின் ஶாஸ்த்ரத்ருஷ்டிநிஷ்டையை வர்ணித்தது. அவனல் க்ருஹாவிஷ்டம் போன்ற ப்ரஹ்மரஸாவேச இன்பமில்லை. இதுவரையில் புருஷன் ப்ரவேசிக்கவில்லை. இப்பொழுதுதான் முதல் ப்ரவேசம். இந்த ப்ரஹ்மஸமாதி இன்ப ஶமரஸத்தால் பூரிக்கப்படுகையில்தான் புருஷன் 'ஸத்' என்று ஸத்துக்களால் மதிக்கப்படுவான். இப்பொழுதுதான் இவன் 'ஸத்' என்று பேசத் தக்கவனுனன். 'ஸத்' ஆகித்தானே காணப்படலாம்.

மேலும்—

ஸஜாநூஸ்யூஹஹஷூஹஹா:வஉகிதாநூ
ஷஹூவம் ஸாநஸம் விஷாவ ஊததஶகூ
ஶாவுதிநியி: ஶீதாஶுணீ ஜொவநெ।
ஸாயாஸாஶயிமீதயொவநிஷ்ஷா ஊஷஷ்ஸம்
ஊாமஸஸ ஸநெ யாதி ஸநொரயெநவ
ஷொ வெஷவணாவயமீ॥

ஶாந்திரஸமூர்த்தியாகவே புருஷன் காணப்படுவதை வர்ணித்தது. புருஷன் என்பது ஆத்மா. அவனுடைய ஆத்மஸ்வரூபம் ஶாந்திரஸவடிவாயிருக்கட்டும். அவனுடைய தேஹ

மப்படியிராதெ? தேஹவிசிஷ்டனுகிய இப்புருஷனை எப்படி ஶாந்திரஸமூர்த்தியாக வர்ணிப்பது? என்ற கேள்விக்கு பதில் — இவன் தேஹத்தில் ஒவ்வொரு அவயவமும் ப்ரஹ்மானந்தரஸவடிவாயிருக்கிறது. எல்லாம் பரவசம், ஸ்வவசமென்பதேயில்லை. எல்லாம் பரனுக்கு அர்ப்பிதம்; பரனுலாவிஷ்டம். சுவஸ்ய-மஹா மஹிமையுடைய இந்தப் புருஷனுடைய, சுஂ மாஙி-ஒவ்வொரு அங்கமும், திருமேனியில் ஓரிடமும்பாக்கியில்லாமல் ௨ஹ ௨ஹ:- திரும்பவும் திரும்பவும், வஉகிதாஙி சிலிர்த்துக்கொண்டேயிருக்கிறது. ரோமங்கள் எழுவதும் எழுவதுமாகவேயிருக்கின்றன. புதிது புதிதாய் சிலிர்த்தவண்ணமாகவேயிருக்கிறது. 'தஉஸ்ரவாரஂ ஹ்ருதயஂ ஬தெதஂ' என்ற பாகவத ச்லோகத்தில் 'நெதெ்ர ஜலஂ மாத்ர ரஹெஷ ஹஷ:' என்று கடைசியில் படித்துள்ளதை இங்கே முதலிலேயே குறிக்கிருர். நம் மயிர்க்கூச்சை நாம் புத்திபூர்வமாக செய்துகொள்ளமுடியாது. பரவசத்தாலேயே யாவது. சுஜ உவஂ உநவஂ—உடலங்களிலுள்ள ரோமங்கள் வெளிக்கிளம்பி எழுகின்றன. மனமோ உள்ளே செல்லுகிறது. உள்ளேயுள்ள ஹார்த்த ப்ரஹ்மத்தினிடம் திரும்புகிறது. வெளிநோக்கைத் துறந்து உள்நோக்குகிறது. விஹா வ உத்ர தஶகஉரா வ்ருதிஙியி:—எண்ணம் (நெஞ்சு) உருகிய சர்க்கரைப்போலதித்திப்புடன் த்ரவிக்கிறது. 'சர்க்கரை' என்பது 'கல்லை' யும் சொல்லும். சுஶவாரஂ- 'கல்லேயானது' என்று உறுகாத மனத்தைக் கூறுவது. முன் கல்லாயிருந்தது. இப்பொழுது உருகி த்ரவிக்கிறது. மனோவ்ருத்தியான நினைவுகள் இன்பவெள்ளமாக இருக்கின்றன. ஶீதாஶ்ரூணீ ஜொவநெ—கண் பனிக்குளிர்ச்சியாகச் சோர்கிறது. குளிர் நீர். உஷ்ணமென்பதே யில்லை. க்ருஹாஉஶீத நெத்ராஉவஉஜகீக்ருதஶாத்ரவாநு ஸஹா வரஶணாவிஷ்டஉத்ருஷ்டிவ்ய:ஸவஉஜெஹிஹி: என்ற ச்லோகத்தையும் பாகவத ச்லோகத்தையு மிங்கே அநுஸரிப்பது. 'மநஃ' இங்கே பரக்கும் ரதம். வைகுண்டத்திற்கு-வைகுண்டரிடம் இழுத்துச் செல்லும் ரதம். வைகுண்டத்திற்கு, கண்டாபதம்—ராஜமார்க்கம் எது? மாயையெனும் ப்ரக்ருதிமண்டலத்தைத்தாண்டுவிக்கும் மார்க்கம். அதைத் தாண்டுவிக்கும் ஸாரதி யார்? ஸாரதி வேஷம் பூண்ட 'தேர் கடவிய' பெருமானுன மாயா ஸாரதி. ஸாரயி: ஸவஉநெதா. அர்ஜுந ரதத்திற்கு நேதாவான ஸாரதி எனும் வேஷம், உண்மையில் எல்லோரையும் மாயைத் தாண்டுவிக்கும் ஸாரதி. எந்த வழி? அர்ச்சிராதியானவழி. அந்த வழிக்கு எது ப்ரமாணம்? உபநிஷத்துக்கள். உபநிஷத்துக்கள் 'ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி' என்றும் பேசுகின்றனவே? விருத்தம் போல் கண்கின்றனவே. உபநிஷத்துக்களின் ஹ்ருதயமான உட்கருத்தை, 'ஶ்ருதொபநிஷத்கஶத்யஹிபாநாவ்' என்று உபநிஷத் ச்ரவணுதிகள் செய்த ஜ்ஞாநிக்கு இதுவே மார்க்கமென்று வ்யாப்தி ப்ரதர்சநத்தோடு ஸூத்ரகாரர் ஹேது கூறினர். ஸூத்ரங்களிலும் விவாதம் வருகிறது. 'ஶதொரயஉவகவ உஹயநா' 'ஸ்வெஷாஹெ்ரகெஷாஂ' என்றவிடங்களில் கதியின் அபேக்ஷையில்லை' என்று ஸூத்ரகாரர் ஹ்ருதயமென்று கக்ஷி வருகிறது. இப்படி உபநிஷத்துக்களிலும் ஸூத்ரங்களிலும் கக்ஷி வந்தாலும், மாயாஸாரதி பாடிய கீதோபநிஷத்து இந்த விஷயத்தில் அத்யந்தஸ்பஷ்டமாய் 'இந்த அர்ச்சிராதியான சுக்லகதி ப்ரஹ்மவித்துக்களுக்கு ப்ரஹ்மத்தை அடைய சாச்வதமான கதி' என்று பட்டப்பகலைப்போல் தெளிவாக்கியிருக்கிறது. 'ஶுக்ல க்ருஷ்ணெ ஶதீஹெ்யெதெ ஜஶத: ஶாஶ்வதெ உதெ ஏகயா யாத்யநாவ்ருத்திஂ அந்யயாவர்ததெ புந:' என்று காட்டினர். ஸூத்ரகாரர் இந்தத் தெளிவை 'யொஶிந: ப்ரதி ஸ்மர்யதெ ஸ்மார்தெ உசைதெ' என்று ஸ்பஷ்டமாய்க் காட்டினர். யோகிகள் ப்ரஹ்மத்தை சேரும் மார்க்கத்தைக் காட்டினர்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

துர்க்கந்தத்தில் ப்ரீதியுள்ள பிசாசம் நல்ல வாஸனையை முகர்ந்ததும் ஒதுங்கிவிடும். கொசு புழு முதலியவைகளும் துர்க்கந்தம் நிறைந்த இடங்களில் தங்கும். நல்ல வாஸனையைக் கண்டால் ஒதுங்கிப்போய்விடும். பூச்சி புழு பிடித்த பயிர்களுக்கும் செடி கொடிகளுக்கும் கோமூத்ரத்தைத் தெளித்தால் வ்யாதி நீங்கி அவை நன்றாவதையும் காண்கிறோம். இவ்வாறே பிசாசங்களால் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கோமூத்ரத்தாலும், கோரஜஸ்ஸாலும் சுத்தி செய்து ரக்ஷோக்ந மந்த்ரங்களாலும் பகவந் மந்த்ரங்களாலும் ரக்ஷை செய்விக்க அவ்வுபத்திரவம் நீங்கிசாந்தியுண்டாகுமென்று ஸ்ரீ பாகவதம் 10-வது ஸ்கந்தம் 6–7 அத்யாயங்களிலிருந்து அறிகிறோம்.

ஸ்ரீ க்ருஷ்ணனைக் கொல்ல நினைத்த பூதனை குழந்தை பிறந்த பத்து நாளைக்குள்ளாகவே நந்தகோபரின் வீட்டிற்குச் சென்று தொட்டிலிலிருந்த சிறுகுழந்தை க்ருஷ்ணனை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு பால் கொடுக்கும்போது ஸ்ரீ க்ருஷ்ணன் அவள் பிராணனையும் பாலுடன் சேர்த்து உட்கொள்ள அவள் தன் உண்மை வடிவத்துடன் கீழே விழுந்திறந்தாள். உடனே யசோதை முதலானவர்கள் ஓடிவந்து அப்பிணத்தின் மீது விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை எடுத்து இப்படி ஏற்பட்ட பிசாசோபத்திரவத்திற்கு பரிஹாரமாக ஸ்ரீக்ருஷ்ணனுக்கு கோமூத்ரத்தால் ஸ்நானம் செய்வித்தும் பசுக்களின் தூசியால் தேஹத்தில் பூசியும் கோமயத்தால் குழந்தையின் தேஹத்தில் 12 ஸ்தானங்களில் ஒத்தியும் கேசவாதிபன்னிருதிருநாமங்களால் ரக்ஷைசெய்தார்கள். அவ்வாறு செய்யும் காலத்தில் கோபிகள் கை கால்களை தாங்கள் சுத்தி செய்துகொண்டு ஆசமனமும் செய்து தங்கள் கைகளிலும் ஹ்ருதயம் முதலான விடங்களிலும் அகாரம் முதலான பீஜாக்ஷரங்களை, மேல் செய்யப்போகும் விஷ்ணுகவச மந்த்ர ஜபத்திற்கு தங்களுக்கு யோக்யதை உண்டாவதற்காக, முதலில் ந்யாஸம் செய்துகொண்டு குழந்தையின் கைகளிலும் தேஹத்திலும் முன்போல் அந்த பீஜாக்ஷரங்களை ந்யாஸம் செய்து பின் விஷ்ணுகவச மந்த்ரஜபம் செய்து ஸர்வோபத்ரவ சாந்தியை பகவானிடம் ப்ரார்த்தித்தார்கள் என்று

'गोमूत्रेण स्नापयित्वा पुनर्गोरजसार्भकम्
रक्षां च चक्रुः शकृता द्वादशाङ्गेषु नामभिः ॥
गोप्यः संस्पृष्टसलिला अङ्गेषु करयोःपृथक् ।
न्यस्यात्मन्यथ बालस्य बीजन्यासमकुर्वत ॥
अव्यादजोऽङ्घ्रिमणिमा तव जान्वथोरू ।
यज्ञोऽच्युतः कटितटं जठरं हयास्यः என்று துடங்கி
स्वप्नदृष्टा महोत्पाता वृद्धबालग्रहाश्च ये ।
सर्वे नश्यन्तु ते विष्णो र्नामग्रहण भीरवः' ॥

ஸ்ரீபாகவதம் 10-6-20 முதல் 30 வரையிலுள்ள ச்லோகங்களால் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு **'विष्णो र्नाम ग्रहण भीरवः'** என்பதால் பகவந்நாமங்களை உச்சரிக்குமிடங்களில் இந்த பிசாசங்கள் நடமாடவே மாட்டாவென்று நன்கு புலப்படுகிறது.

இவ்வளவால் இத்தகைய பிசாசம் முதலியவற்றின் சங்கையுண்டானபோது பகவந்நாமோச்சாரணம், ஸஹஸ்ரநாம மந்த்ர ஜபம் மற்றும் பகவந் மந்த்ர ஜபம் ரக்ஷஸ்ஸுக்களை ஒழிக்கக்கூடிய வேதஸூக்தங்களின் பாராயணம் முதலிய பரமைகாந்திகளுக்கநுகுணமான உபாயங்களைச்செய்து அவற்றின் பரிஹாரத்தைத்தேட வேண்டுமே யல்லாது க்ஷுத்ர தேவதைகளையும் மற்றும் தாழ்ந்தவர்கள் கீழ்மக்கள் சொல்லும் வழிகளில் ஆடு கோழி கள்ளு முதலிய ஸாமக்ரிகளைச் சேர்த்து பரிஹாரம் செய்வது பரமைகாந்திகளுக்குத் தகாதவை என்றும் பரமைகாந்திகளல்லாதவர்களுக்குங்கூட அவை பூர்ண பலனைத் தாராமல் நிற்பதுமல்லாமல் மேற்கொண்டு அநர்த்தத்தில் மூட்டிவைக்கும்படியான ரீதியில் கொண்டு சேர்க்கும் என்றும் ஸ்பஷ்டமாகின்றது.

ஶ்ரீ:

ஹம்ஸ ஸந்தேசம்

तस्मिन् सीतागतिमनुगते तद्दुकूलाङ्कमूर्तौ
तन्मञ्जीरप्रतिमनिनदे न्यस्तनिष्पन्ददृष्टिः ।
वीरश्चेतोविलयमगमत् तन्मयात्मामुहूर्तं
शङ्के तीव्रं भवति समये शासनं मीनकेतोः ॥

ஹம்ஸம் கண்ணில் பட்டதும் அதற்கு ஸீதையோடு பல அம்சங்களில் மிக்க ஸாத்ருச்யமிருந்ததை கவனிக்க கவனிக்க ஸீதையின் நினைப்பேமிக்ககவனமாய் த்யாநிக்கும்படி நேர்ந்து அந்த த்யாநத்தோடு ஹம்ஸத்தை கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கையில் ஸீதா மயமாகவே மன முருகி லயித்து அதனால் ப்ரஜ்ஞாபங்கமான மூர்ச்சை போன்ற அவஸ்தைக்கு ராமன் வசமானார் என்பதை இங்கே வர்ணிக்கிறார். மேக ஸந்தேசத்தில், தூதனாக வரிக்கப்போகும் மேகத்தைப் பார்த்ததும் 'மழைகாலம் வருவதால் பிரிந்திருக்கும் காந்தனை நினைத்து அவன் பிரிவையாற்றாமல் அவன் எங்கே ஏகாகியாய் விரஹியாய் திண்டாடுகிறானோ' என்று பயந்து இடி இடிக்கும் பொழுதும் மழை பெய்யும் பொழுதும் ப்ரியனைக் கட்டி அணைக்கக் கிடைக்கவில்லையே என்று விரஹம் பொறுக்காமல் ப்ரியையின் உயிர்போய்விடுமோ என்று பயந்தான் என்று மட்டும் கூறப்பட்டது. ப்ரியையினுடைய ப்ராணாபாய பயத்தை தன்னுடைய க்ஷேமத்தைப் பற்றி அளகாபுரிக்கு ஆகாய மார்க்கமாய் செல்லக்கூடிய அந்த மேகமூலமாக செய்தி யனுப்பலாமென்று எண்ணி அதற்கு உபசாரங்கள் செய்து ஸ்வாகதம் கூறினான் என்றும் வர்ணிக்கப்பட்டது. அவன் மூர்ச்சாவஸ்தையை அடைந்ததாக அங்கே கூறாததற்குக் காரணம் மேகத்திற்கும் தன் ப்ரியைக்கும் ஸாத்ருச்யங்களில்லாமையாக இருக்கலாம். இங்கே ஸாத்ருச்யங்களின் மிகுதியினால் ஹம்ஸத்தின் த்வனி, நடை, ஆக்ருதி முதலியவைதைப் பார்த்து ஸீதா த்யாநம் கனத்து அவள் விரஹத்தால் மூர்ச்சை நேர்ந்ததை வர்ணிப்பது மிகவுசிதம்.

தஸ்மிந்-சுத்ததவளமாய் பார்க்கமிக இனிமையாய் ஸீதா ஸாத்ருச்ய மிகுதி யுடையதாய் உள்ள அந்த ஹம்ஸத்தினிடத்தில், ஸீதாகதிமநுகதே-அன்ன நடை என்பது உத்தம ஸ்த்ரீகளுக்கு ப்ரஸித்தம். 'மென்னடைய வன்னங்காள்' என்று ஆழ்வார் தூதுவிட்டது கவி நெஞ்சிலோடுகிறது. ராமனுக்கு, முன் காலத்தில் நளனுக்கும் தமயந்திக்கும் தூதுகள் செய்த ஹம்ஸத்தின் நினைவு இருந்ததென்பது **'प्रागप्येवं परिणतफलां नैषधे वीक्ष्या वार्तां'** என்று மேலே ஸந்தேச முடிவில் கூறுவதால் நிச்சயமாயினும் இங்கே இந்த ச்லோகத்தில் வர்ணிக்கப்பட்டும் மூர்ச்சை தெளிந்த பிறகுதான் ஹம்ஸத்தை தூதனுப்பும் எண்ணமுதித்தது. பதே பதே ஸீதா த்யாநாரோஹமும் மெள்ள மெள்ள மூர்ச்சா வசமாவதாகவே இருந்தால்முதல்முதலிலேயே தூதனுப்பும் எண்ண முதிப்பதற்குமிடமில்லை. ஸீதா ஸாத்ருச்யாம்சங்களை ஹம்ஸத்தைப் பார்த்துக்கொண்டே ஒன்றொன்றாய் வர்ணிக்கையில் அன்ன நடை முதலில் வர்ணிக்கப்படுவது உசிதம். ஸீதாகதிக்கு அன்ன நடை உபமானமாயினும் இங்கே ஸீதையின் நடையையே பின்பற்றி அன்னம் நடக்கிறதென்று உபமானோபமேய பாவங்களை மாற்றியதுபோல் இருக்கிறது. அதை ப்ரதீபாலங்கார மென்பர். ப்ரதீபம் என்பது தலைக் கீழ் மாற்றி உரைப்பதைச் சொல்லும். இங்கே, 'ஸீதை நடப்பது போலவே இந்த அன்னம் நடக்கிறதே' என்று உற்று உற்றுப் பார்த்து அன்னத்தில் கண் இருந்தாலும் எதிரே இல்லாத ஸீதையின் த்யானம் பெருகுகிறதென்று ரஸம்.

ப்ரதீபாலங்காரத்தில் இங்கே நோக்கில்லை. ஹம்ஸரானயதிராஜர் குருபரம்பரையில்இரண்டாவது ஆசார்யையான பிராட்டியின் கதியை அநுஸரிப்பவர் என்றும் த்வநி. அதிலும் ஸீதை ராவணனுக்கும் தாயானதால் 'சேதனனை உபதேசத்தாலே திருத்தும்' என்று ஸ்ரீ வசனபூஷணத்தில் அருளியபடி **'स्वेषु दारेषु रम्यतां' 'विदितस्स हि धर्मज्ञः शरणागतवत्सलः' 'तेन मैत्री भवतु ते यदि जीवितु मिच्छसि'** என்று உபதேசம் செய்ததை திருவடி நேரில் கேட்டு ராமனிடம் அப்பொழுதுதான் தெரிவித்திருந்தார். ஸீதா கதியைப் பார்த்து அன்னம் நடை பழகிக்கொண்டது என்பதை

‘அநுகதி’ என்பதால் ஸூசிக்கிறார். ‘தத்துகூலாங்கமூர்த்தௌ.’ இங்கே ‘தத்’ என்பது இதற்குமுன்னே கூறிய ஸீதையைக்குறிப்பது. ஸீதை பரோக்ஷமாய் இருப்பதால் ‘அவள் வெண்பட்டின் கரையிலுள்ள ஹம்ஸ வடிவு சித்ரமே’ என்று ராமன் நினைவின்வடிவு. அந்த வெண்பட்டில் அங்கமாயிருப்பது இங்கே உயிருள்ள ஹம்ஸமூர்த்தியாயிருப்பதால்ஸீதையின் நினைவு த்ருடப்படுகிறது. ‘தந்மஞ்ஜீரப்ரதிம நிநதே.’ ஹம்ஸம் ப்ரியையோடு விஹரிக்கையில் மதகலமான ஹம்ஸ த்வநி கேட்க்கையில் அது ஸீதை நடக்கையில் அவளுடைய பாதச்சிலம்பின் இனிய த்வநிபோலவே இருக்கிறது. பரோக்ஷமாயிருக்கிற ஸீதையின் நினைவு முன்பும் எதிரேயுள்ள ஹம்ஸத்தினிடத்தில் ஸீதாஸாத்ருச்ய ஒற்றுமையின் கவனிப்பு பின்புமாய் வர்ணிக்கப்படுவது ஸீதா த்யாநத்தின் ப்ராதான்யத்தையும் ப்ராதமிகத்வத்தையும் காட்டுகிறது. ‘தஸ்மிந்’ என்று முதலில் படித்தது, ஹம்ஸம் முதலில் கண்ணில் பட்ட பிறகுதான் அதன் நடை த்வநி முதலியதால் ஸீதா ஸ்மரணமும் த்யாநமும் ஸம்பவித்ததினால்க்ரமத்தையநுஸரித்தது ‘ந்யஸ்த நிஷ்பந்த த்ருஷ்டி:’ ஹம்ஸத்தினிடம் சென்ற கண் அதை உற்று உற்றுப் பார்த்து அப்புறம் சலிக்காமலே— இமை கொட்டாமலே இருந்தது. ‘ந்யஸ்த’ என்பதினால் ஹம்ஸத்தினிடமே அர்ப்பிதமாயிற்று என்று த்வநி. ‘நிஸ்பந்தம்’ என்பதற்கு அசலமாய் என்று பொருள். த்யாந விஷயத்தில் **‘अचलत्वं चापेक्ष्य’** என்கிறசலிக்காமை என்னும் அசலத்வத்தைப் பொருளாகக் காட்டும் ப்ரஹ்ம ஸூத்ரத்தையும், அதற்கு ஆதாரமான **‘ध्यायतीव प्रथिवी ध्यायन्तीव पर्वताः’** ஸ்திரை என்னும் பூமி த்யாநம் பண்ணுவதுபோல் சலிக்காமலிருக்கிறது. பர்வதங்கள், முனிகள் த்யாநத்தில் அசலமாய் இருப்பதுபோல் அசலமாய் இருப்பதால் த்யாநநிஷ்டையில் இருப்பதுபோல் காண்கின்றன என்கிற ச்ருதியையுமிங்கே நினைக்கவேணும். **‘तन्मयात्मा चेतो विलयमगमत्’** இவர் மனம் ஸீதாமயமாகி லயத்தை அதாவது—நிர்வ்யாபாரஸ்திதியை அடைந்தது. மனது அசங்காமல் ஒரு சேஷ்டையுமில்லாமலிருந்தது.

‘अभ्यस्यन्तीमनितरजुषः भावनायाः प्रकर्षात्
स्वान्तेनान्तर्विलयमृदुना निर्विकल्पं समाधिम्’

என்று மேலே 2-வது ஆச்வாஸத்தில் ஸீதை ராமத்யாநத்தால் மனது ராமனிடம்லயமடையும் நிர்விகல்ப ஸமாதியை அப்யாஸம் பண்ணுவதை ராமன் வர்ணிக்கிறார். அங்கே அவள் புத்திபூர்வகமாக தன் ப்ரயத்நத்தால் த்யாநாப்யாஸம் செய்து அதுமுற்றி தான் அரியாமல் லயம் வருவது. இங்கே ஸாத்ருச்யங்களை கவனித்தால் புத்தி பூர்வகமாக த்யாநாப்யாஸமில்லாமல் அவசமாய் மூர்ச்சைபோன்ற லயம் வருகிறது. ஸீதையோடு அவிபாக லயமல்ல. வீர:— போர்களில் தோளாத தனிவீரன் இப்படி கோழை மனதாய் மூர்ச்சையடைந்து மன்மத பாண வித்தராய் அவன் வசமாகிறார். ‘வீ’ என்பது பக்ஷிக்குப் பெயர். பக்ஷிராஜனை ஈரணம் அதாவது—தம் வாஹநமாக வேகமாய்ப் பரக்கும்படி ப்ரேரணமும் த்வரணமும் செய்கிறார். கருடவாஹநத்தைச் சொல்லுகையில் அவரையே த்வஜமாக உடையவர் என்பதையும் நினைக்கவேணும். முஹூர்த்தம்— இந்த மூர்ச்சை அதிஸ்வல்பகாலமே. ஶங்கே- இங்கே கவி உத்ப்ரேக்ஷிக்கிறார். ‘மந்யே’ என்றும் உத்ப்ரேக்ஷையைக்குறிக்கலாம். அப்படிச் சொன்னால் இப்படி ராமன் மன்மதனுக்குத் தோற்று தைர்யமிழந்து அவன் வசமாய் விட்டார் என்பதை தான் நினைப்பதாகச் சொல்வதாகுமென்று அநௌசித்யத்தைத் திருவுள்ளம் பற்றி ஶங்கே என்று ஸந்தேஹ பர்யாய வசனமாய்ச் சொல்லுகிறது ரஸம். ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் **‘तदपिपरममं तत्वं गोपीजनस्य वशं वदं’** என்ற வார்த்தை மன்மதன் தோழனான வஸந்தன், மன்மதன் த்ரிமூர்த்திகளையும் ஜயித்தவன் என்று மன்மதனை ப்ரசம்ஸை செய்வது கவியின் பேச்சல்ல. ராமன் இப்படி ப்ரியை விஷய நினைப்பால் மான்மத பாவவச்யராய் மூர்ச்சித்து மன்மதனுக்குத் தோர்ப்பது. ‘மாநபங் மாநுஷத்வம்’ என்றபடி உலகத்தில் பொதுவான மநுஷ்ய ஸ்வபாவத்தை இவர் நடித்து வந்ததினால் என்பதை ஸூசிப்பதற்காக லோக ஸ்வபாவத்தைக் குறிக்கும் ஓர் அர்த்தாந்தர ந்யாஸம் செய்கிறார். ஸமயே- ஓர் ஸமய விசேஷத்தில், எதிரியான மன்மதனுக்கு ஜய யோக காலத்தில், மீநகேதோ: ஶாஸநம் தீவ்ரம் பவதி- மீன் கொடியோனான மன்மதனுடைய ஆஜ்ஞை விலக்கக் கூடாமல் அத்தனைக் கடுமையாய் இருக்கும். ஶாஸநமென்கிறபதத்தை

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஈராபயஹஸ்தம், மாலை பரியட்டம் கொண்டு வந்து ஸ்ரீ அழகியசிங்கருக்கு மாலை பரியட்டம் ஈராபயஹஸ்தம் திருத்துழாய் முதலிய மரியாதைகளைச்செய்து தெண்டன் ஸமர்ப்பித்து கோயிலுக்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் தம்பிருது, கோயில் பிருதுகளுடன் எழுந்தருளி கோயில் த்வஜஸ்தம்பம் வந்ததும் அர்ச்சகர்கள் ராமாநுஜத்தை எழுந்தருளப் பண்ணி வந்து ஸ்ரீ அழகியசிங்கருக்கு மாலை பரியட்டம், சடாரி திருத்துழாய் ஈராபயஹஸ்தம் முதலான மரியாதைகளைச் செய்து மூலவர் ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனார்கள். மகரக்குழைக்காதர்பெருமாளை மங்களாசாஸநம்செய்து மாலை பரியட்டம், சடாரி ஈராபயஹஸ்தம், இடுக்குத் திருத்துழாய் முதலான மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு திருவாலவட்டகைங்கர்யம் செய்து நியமனம்பெற்று ராமர் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. ஏகாதசி த்வாதசி இரண்டு நாளும் அங்கு எழுந்தருளியாயிற்று. இரண்டு நாளும் ஆழ்வாரம்மாளால் ததீயாராதநம் நடத்தப்பட்டது. 14-5-54 மாலை 4 மணிக்கு உபந்யாஸம் செய்தாயிற்று. 5 மணிக்கு ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ ஆதிநாதனை மங்களாசாஸநம் செய்துகொண்டு அவ்விடத்தில் எக்ஸிகூடிவ் ஆபீஸர் முதலிய ப்ரமுகர்கள்கூட இருந்து செய்து வைத்த பாலை, பரியட்டம், தீர்த்தம், ராமானுஜம், இடுக்குத்திருத்துழாய் முதலான மரியாதைகளை பெற்றுக்கொண்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி புளிய மரத்தை ஸேவித்துக்கொண்டு நம்மாழ்வார் ஸந்நிதிக்கு எழுந்தருளி பொன்னிகுறட்டிலிருந்து மங்களாசாஸநம் செய்துகொண்டு அவ்விடத்திலும் மாலை பரியட்டம் ராமானுஜம் முதலிய மரியாதைகளை பெற்றுக்கொண்டு அவ்விடத்தில் மூலவர், ஆழ்வாராதிகளையும் ஸேவித்துக்கொண்டு ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு எழுந்தருளினார். அவ்விடத்தில் ஆராதனங்களை முடித்துக் கொண்டு இரவு 10 மணிக்குபுறப்பட்டுக்ருஷ்ணாபுரத்திற்கு 2 மணிக்கு எழுந்தருளியாயிற்று. அப்பொழுது கோயில் நிர்வாஹ அதிகாரிகள் கார்யஸ்தர்கள் வாத்யம் முதலிய பிருதுகளுடன் அரிவாணம் முதலான மரியாதைகளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது அழகியசிங்கர் பல்லக்கைவிட்டு இறங்கி தெண்டன் ஸமர்ப்பித்து பரியட்டம் மாலை ஈராபயஹஸ்தம் திருத்துழாய் முதலான மரியாதைகளை பெற்றுக்கொண்டு அலங்கரிக்கப்பட்ட வானமாமலை மடத்திற்கு எழுந்தருளினார்.

மறுநாள் 15-5-54 காலை அபிகமநாராதநம் முடிந்ததும் கோயில் எச்ஸிகூடிவ் ஆபீஸர் சிதம்பரம்பிள்ளை, மாஜி டிரஸ்டி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார், மற்றும் ஸ்தலத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸ்தல வாத்யங்களுடன் ஸ்ரீ

ப்ரயோகித்தால் **'एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गी सूर्याचन्द्रमसौ विधृतौ तिष्ठतः'** என்ற ச்ருதியையும், **'सा च प्रशासनात्'** என்கிற ஸூத்ரார்த்தத்தையும் ஸூசநம் செய்து, தன் கட்டளைக்கு அடங்கி ஸூர்ய சந்த்ராதிகள் நடக்கிறார்கள் என்றபடி எல்லோரையும் சாஸிப்பவர் காமனால் சாஸிக்கப்படுகிறார் என்ற ரஸத்தைக்காட்டுகிறார். 'மீநகேதோ:' என்று மந்மதனைக் குறிப்பது. மீனைக் கொல்லும் கருட பக்ஷியை த்வஜமாக உடையவர் என்று வீர பதத்தால் காட்டப்பட்டவர் மீன் கொடியோனுக்குத் தோற்கிறார். கருடக் கொடித் தாழ்கிறது. மீனக்கொடி ஓங்குகிறது என்னும் விசித்ர ரஸத்தைக் காட்டுகிறது. ஸீதாகதியை ஹம்ஸம் 'அநுகமநம்' செய்கிறது என்று ஸாதித்ததிலும் ஸீதை மஹிமைகளை அதிஸுந்தரமாய் விளக்கும் சுந்தரகாண்டகதியை இந்த ஹம்ஸ ஸந்தேசகாவ்யம் பின்தொடர்கிறது என்கிறதையும் த்வநியால் காட்டுகிறது.

(தொடரும்)

அழகியசிங்கரை மங்களாஸாஸநத்திற்குஎழுந்தருளும்படி ப்ரார்த்தித்தார்கள். உடனே ஸ்ரீ அழகியசிங்கரும் 'தன்யோஸ்மி' என்றுஸாதித்துக்கொண்டு ஸகல பிருதுகளுடன் த்வஜஸ்தம்பத்திற்கு ஸமீபம் எழுந்தருளியாயிற்று. ராமாநுஜத்தை அர்ச்சகர்கள் அதிகாரிகள் ஸந்நிதியிலிருந்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் தெண்டன் ஸமர்ப்பித்த உடன் பரியட்டம், மாலை, தீர்த்தம், சடாரி, அபயஹஸ்தம், திருத்துழாய் முதலான மரியாதைகளை அருளப்பாடுடன் செய்து ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போனார்கள். அவ்விடத்தில் ஸ்ரீ அழகியசிங்கரால் பட்டு ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கருக்கு எக்ஸிகூடிவ் ஆபீஸர், அதிகாரிகள், ப்ரமுகர்கள் நின்றுகொண்டு மாலை, பரியட்டம், சடாரி, அபயஹஸ்தம், தீர்த்தம், திருத்துழாய்முதலானமரியாதைகளைச்செய்து வைத்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் மாலை அரிதி பரியட்டத்துடன் நாச்சியார் ஸந்நிதி மங்களாசாஸநம் செய்தருள பின்னர் கோயில் எக்ஸிகூடிவ் ஆபீஸரும் கார்யஸ்தரும் ப்ரமுகர்களும் மடத்திற்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போனார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் எக்ஸிகூடிவ் ஆபீஸர், கார்யஸ்தர்கள்முதலான ப்ரமுகர்களைப்பார்த்து 'கோயில் கார்யங்கள்நேர்த்தியாகவும் நன்றாகவும் நடக்கிறது' என்றுசிலாகித்து ஸ்ரீ கார்யத்தைக்கொண்டு மாலை போட்டுவைத்து மந்த்ராக்ஷதையும் அநுக்ரஹித்தாயிற்று. 15-5-54 இரவு க்ருஷ்ணபுரத்தை விட்டு கீழ்நத்தம் எழுந்தருளியாயிற்று. 16-5-54 அவ்விடத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தியை கொண்டாடி 17-5-54 இரவு அவ்விடமிருந்து திருநல்வேலி வீரராகவபுரத்திற்கு எழுந்தருளியாயிற்று.

17-5-54 இரவு திருநல்வேலி ஜங்க்ஷன் வீரராகவபுரத்திற்கு பெருமாளை எழுந்தருளப்பண்ண ஸ்ரீ அழகியசிங்கர் ஸுமார் 11 மணிக்கு டி. வி. எஸ். பஸ் ஸர்வீஸ் ஸ்டாலில் ஷை கம்பனி மானேஜர் (1) ஸ்ரீ ஸி. எஸ். வெங்கடாசாரியர் (2) ஸ்ரீ எஸ். ரகுநாதாசாரியர் (தாசில்தார்) (3) (இம்பீரியல் பாங்க் காஷியர்) ஸ்ரீநிவாஸ அய்யங்கார் (4) நரஸிம்ஹஐயங்கார் (5) செல்லமய்யங்கார் (இந்தியன் பேங்க் கேஷியர்) (6) மைஸூர் ஸ்ரீ அநந்தாசாரியர் இவர்கள் மேற்படி ஸ்டாலை நன்றாக அலங்கரித்து அதிலிருந்து தந்தப்பல்லக்கில் வெகு விமர்சையாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஊர் பூராவும் பாண்டு வாத்யங்கள் ஸ்பெஷல் மேளவாத்யம் முதலியவைகளோடுபூர்ணகும்பத்துடன்வெகு விமர்சையாகவும் ச்ரத்தையாகவும் வீரராகவபுரத்தில் அலங்கரிக்கப்பட்டிருக்கும் திருமாளிகைகளுக்கு ஸ்ரீ அழகியசிங்கரை ஊர்வலமாக பட்டணப்ரவேசம் செய்வித்து எழுந்தருளப் பண்ணினார்கள். மேற்கண்ட ப்ரமுகர்கள் 18-5-54 முதல் 7 நாள் வரை ததீயாராதன உத்ஸவாதிகளை செய்துவைத்துக்கொண்டாடினார்கள். தாசில்தார் ஸ்ரீ எஸ். ரகுநாதாசாரியர் தனியாக மண்டபகைங்கர்யம் செய்து டோலோத்ஸவம் வெள்ளிக்கிழமை யன்று நடத்தினர். ஆஸ்திக தர்மத்தை அநுஸரித்து பகவத் கைங்கர்யத்தில் ச்ரத்தையாக ஈடுபட்டு வஸூலில் செய்து நடத்தினார்கள். 24-5-54 இரவு அவ்விடத்தை விட்டு புறப்பட்டு கோபாலஸமுத்ரம் எழுந்தருளியாயிற்று. அவ்விடம் ஆண்டவன் ஸந்நிதி ஸ்ரீநாராயணாசாரியர் ஸ்வாமி தம்பிகுமாரர் ஸ்ரீ எஸ். எஸ். பி. ராகவாசாரியர் ஸ்ரீ அழகியசிங்கரை பூர்ணகும்பத்துடன் வரவேற்று 25-5-54ல் ததீயாராதனம் செய்வித்து ஆராதித்தார். அங்கிருந்து இரவு 10 மணிக்குப் புறப்பட்டு காருக்குறிச்சிக்கு 2 மணிக்கு எழுந்தருளியாயிற்று. காருக்குறிச்சியில் மறுநாள் வித்வான் ஸ்ரீ. உப. கோபால ரங்காசாரியர் ஸ்வாமி முதலான ப்ரமுகர்கள் சாலை ஸமீபம் பூர்ணகும்பத்துடன் வந்து வரவேற்றார்கள்.

மறுநாள் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி திருவாராதனம் செய்யும் க்ருஹத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி அந்த ஸ்வாமி தம்பி குமாரர்கள் விசேஷமாக ஆராதித்தார்கள். மறுநாள் ஸ்ரீ அஹோபில மடம் ஆனெரி ஏஜெண்டு ஸ்ரீ கோபால ஸ்ரீநிவாஸாசாரியரும் அவர் தம்பி மறு நாளும் விசேஷமாக ஆராதித்தார்கள். மறுநாள் ஊர் ஸ்வாமிகள் ஆராதித்தார்கள். அதற்கு மறுதினம் (த்வாதசி தினம்) வித்வான்

ஸ்ரீஸ்வாமிகுமாரர்கோபாலரங்காசாரியர் ஆரா தித்துஸ்ரீபெருமாளுக்குதங்கச்சங்கிலி ஸமர்ப் பித்தார். மறுநாளும் விசேஷமாக ஆராதித் தார். 30வ இரவு 11 மணிக்குப் புறப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கர் வீதிவலமாக எழுந்தருளி மணிமுத்தாறுக்கு ஸுமார் 1 மணிக்கு எழுந்தருளியாயிற்று.

30-5-54 ராத்திரி காருக்குறிச்சியைவிட்டு ஸுமார் 6 மைல் தூரமுள்ள மணிமுத்தா றுக்கு எழுந்தருளியாயிற்று. 31-5-54 ல் மணிமுத்தாறு கவர்மெண்டு இஞ்சினீயராபீஸ் உத்யோகஸ்தர்கள், ஆஸ்திகர்கள் எல்லோரு மாக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனேயும், ஸ்ரீ அழகிய சிங்கரையும் வரவேற்று எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு திருமஞ்சனம் பண்ணிவைத்தார்கள். அன்று இரவு 10 மணிக்குப் புறப்பட்டு வீரவநல்லூ ருக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு அவ் வூர் சிஷ்யர்களும், ப்ரமுகர்களும் விசேஷ வாத் யங்களுடனும் கோயில் குடை, மாலே முத லான ஸகலமரியாதைகளுடனும் பூர்ணகும் பத்துடனும் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்று கோயிலில் தனியாக அலங்கரிக்கப்பட்ட மண் டபத்தில்எழுந்தருளப்பண்ணினர்கள். 1-6-54 ஊர்வாஸிகள் பூராவும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே விசேஷமாக ஆராதித்தார்கள். ஸ்ரீ கண்ண னுக்கு டோலோத்ஸவமும் நடந்தது. 1-6-54 ஸாயங்காலம் 4 மணிக்கு ஸ்ரீ அஹோபில மடத்திற்கு ஸொந்தமான நிலங்களே ஸ்ரீ அழ கியசிங்கர் கடாக்ஷிக்க எழுந்தருளியாயிற்று. இவ்வூரில் அநேகருக்கு ஸமாச்ரயணமும் பரஸமர்ப்பணமும் நடந்தது. 2-6-54 இரவு 9 மணிக்கு அம்பாஸமுத்திரத்திற்கு எழுந்த ருளியாயிற்று. அவ்விடம் திருவனந்தபுரம் மாஜி இஞ்சினீயர் க்ருஷ்ண அய்யங்கார் ஸ்வா மியும் பல சிஷ்யர்களும் பூர்ணகும்பத்துடன் வரவேற்று க்ருஷ்ண அய்யங்காருக்கு ஸொந்த மான ஒரு க்ருஹத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனேயும் மற்றொரு க்ருஹத்தில் ஸ்ரீ அழகியசிங்கரையும் எழுந்தருளப்பண்ணி விசேஷமாக ஆராதித்து ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவமும் ஸ்ரீக் ருஷ்ண அய்யங்கார் பண்ணிவைத்தார். 4-6-54 மற்ற ஊரிலுள்ள சிஷ்யர்களும் சேர்ந்து ஆரா தித்தார்கள். இவ்விடத்திலும் ஸமாச்ரயண பரஸமர்ப்பணங்கள் நடந்தன. அன்று இரவு 9 மணிக்கு புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள கடயத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ அழ கியசிங்கர் ஸஞ்சார ஆரம்பத்தில் தனக்கு ஸந் யாஸாச்ரமத்தை தந்த திருஎவ்வுள்கிடந்தானே மங்களாஶாஸனம்செய்துகொண்டு பிறகு தான் ஆசைப்பட்டபடி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அவ தாரஸ்தலமான ஸ்ரீ அஹோபிலத்திற்கு எழுந் தருளி ஒன்பது ந்ருஸிஹ்மனேயும் மங்களாஶா ஸனம் செய்துகொண்டு அவ்விடம் ஒரு சாதுர் மாஸ்ய ஸங்கல்பத்தை செய்துகொண்டு அங்கி ருந்து ஸ்ரீ அஹோபிலமட ஸ்தாபகரான ஸ்ரீ மதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் அவதாரஸ்தலமான திருநாராயணபுரம்எழுந்த ருளிதிருநாராயணனேயும், ஸ்ரீ ஆதிவண்சடகோ பயதீந்த்ர மஹாதேசிகனேயும் மங்களாசாஸநம் செய்துகொண்டு அங்கிருந்து ப்ரபன்ன ஜன ஸந்தான கூடஸ்தராயும் நம்ஸந்நிதிக்கு (மடத் திற்கு) விசேஷ பெருமைகளே உண்டுபண்ண வருமான நம்மாழ்வார் அவதாரஸ்தலமான ஆழ் வார்திருநகரிக்கு எழுந்தருளி ஆழ்வாரை மங் களாசாஸனம் செய்துகொண்டு அங்கிருந்து நம் ஆஸ்தானத்தை ஸமீபத்தில் அலங்கரித்து எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கர்களின் அவதார ஸ்தலமான காருகுறிச்சிக்கு எழுந்த ருளியாயிற்று. நம் ஸம்ப்ரதாயம் எப்படி ஆரம்பித்ததோ அதேமாதிரி ஸ்ரீ அழகியசிங்க ரும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் முதல் தன் அவ்ய வஹித ஆசார்யபர்யந்தம் இது வரையிலும் ஒரு கோர்வையாக மங்களாசாஸனம் செய்து கொண்டு எழுந்தருளியாயிற்று. சிஷ்யர்களு டையவும், ஆஸ்திகர்களுடையவும் ப்ரார்த் தனேக் கிணங்கி ப்ரதிக்ராமங்கள்தோறும்எழுந் தருளி சிஷ்யோஜ்ஜீவனம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

(தொடரும்)

ஸ்ரீ:

செய்திகள்

பாதூரில் ஸ்ரீ அஹோபிலமடத்து ஸம்ஸ்க்ருத பாடசாலையில் கோஷ்டி உபநயனம்.

ஸ்ரீஅஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலை வித்யார்த்திகள் 21 பேருக்கும் மற்றும் இதர அக்ரஹாரங்களிலிருந்து வந்த சிறுவர்கள் 12 பேர்களுக்குமாக 33 பிள்ளைகளுக்கு ஸ்ரீஅழகியசிங்கரின் திவ்யநியமனத்தின் பேரில் ஜய ஹூ ஆனி மீ 23உ புதன்கிழமை (7–7–54) பாதூர் ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கடேசப்பெருமாள் ஸன்னிதியில், ஷை பாடசாலை ப்ரதாநாத்யாபகர் ஸ்ரீ. உப. வித்வான் தோட்டாலம் வேணுகோபாலாசாரியர் ஸ்வாமி தலைமையில், உபநயனம் கோஷ்டியாக நடத்திவைக்கப்பட்டது. ஜில்லாவின் பல ஊர்களிலிருந்தும் வைதிக லௌகிக ப்ரமுகர்களும் ப்ரஸன்னமாயிருந்தார்கள். அடியிற்கண்ட ஸ்வாமிகளடங்கிய ஒரு கமிட்டியால் பாதூர் வாஸிகளுடைய பொருளுதவியைக்கொண்டு விசேஷ ததீயாராதனம் 2 தினங்கள் நடத்தப்பட்டது.

கமிட்டியார்

1. ஸ்ரீ R. ஸௌந்தரராஜ அய்யங்கார்.
2. ஸ்ரீ V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார். V. M.
3. ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார். B. A.
4. ஸ்ரீ பட்டாபிராம அய்யங்கார்.
5 ஸ்ரீ S. ஸந்தானமய்யங்கார்.
6. ஸ்ரீ சுந்தரமய்யங்கார். (தர்மகர்த்தா)
7. ஸ்ரீ சேஷாத்ரி அய்யங்கார். மிராசுதார்

P. T. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.
மிராசுதார் & கண்டிராக்டர்.

பாதூர். 9–7–54

ஸ்ரீ அஹோபிலமடம் ஓரியண்டல் ஸ்கூல் நூதன கட்டிடப் பிரவேச விழா.

மாம்பலம்.

சென்ற விஜய ஹூ ஸ்ரீமதழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்ட ஷை பாடசாலை நிகழும் ஜய ஹூ வைகாசிமீ 28உ(10-6-54)பழைய மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி ஸந்நிதியை அடுத்துள்ளஸ்தலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நூதனகட்டிடத்திலாரம்பிக்கப்பட்டது. ஷை கட்டிடத்துக்குரிய புண்யாஹவாசன வாஸ்து சாந்த்யாதிகளை ஸ்ரீ. உப. கோமல் சேஷாத்ரியாசார்ய ஸ்வாமி வெகு பரிஷ்காரமாகச் செய்து வைத்தார். அப்பொழுது ஸ்ரீ. உப. வித்வான் முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப, சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி, சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ, உப, லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ, உப, வாஸுதேவாசார்ய ஸ்வாமி குமாரர்கள், ஸ்ரீ, உப, ஏ, எஸ், கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ப்ரஹ்மஸ்ரீ சேங்காலிபுரம் வித்வான் அனந்தராமதீக்ஷிதரவர்கள் போன்ற மஹான்கள் எழுந்தருளியிருந்து ஷை பாடசாலை போன்ற பல பாடசாலைகளை ஆங்காங்கு ஏற்படுத்துவதில் ஸ்ரீமதழகியசிங்கருக்குள்ள ஆஸத்தியைப் போற்றிப் புகழ்ந்தனர். பின்பு ஷை பாடசாலை ப்ரதானாசிரியர் மாணவர் சார்பாகசில ப்ரார்த்தனா ச்லோகங்களைப்படித்தார். ஸ்ரீ. உப.கோமல்சேஷாத்ரியாசார்யஸ்வாமியங்கு விஜயஞ்செய்தவர்களுககு வந்தனோபசாரம் கூறினார். உத்தேசிக்கப்பட்ட சுப முஹூர்த்தத்தில் பாடசாலையும் ஸ்தோத்ரானுஸந்தான பூர்வகமாக ஸ்ரீ அழகியசிங்கர் அனுக்ரஹத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்டது.

R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார். H. M.
ஸ்ரீ அஹோலமடம் ஓரியண்டல் ஸ்கூல்
மாம்பலம்.

11–6–54

ஆரம்ப பாடசாலை
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ அஹோபிலமடத்து ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தின்பேரில் ஸ்ரீரங்கத்தில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடமும் அதற்குப் பிறகு ஒரு ஹைஸ்கூலும் (Oriental High School) ஏற்படுத்துவதை முன்னிட்டு ஒரு விசேஷ பொதுக்கூட்டம் 27–5–54 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது. அதுஸமயம் இவ்வூர் ப்ரமுகர்களும், ஆஸ்திகர்களும் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ. உப. வித்வான் தேசிகதர்சன விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் முன்னிலையில் ஸ்ரீ அஹோபிலமடத்தின் (Speual edi cati -nal officer) ஆகிய ஸ்ரீ. T. ராமஸ்வாமி அய்யங்கார் M. A. L. T அவர்கள் ஷை பாடசாலையின் பரந்த நோக்கங்களை விளக்கிக் காட்டி இந்தப் புனித பூமியில் உடனே ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடமாவது அவச்யம் ஆரம்பிக்கவேண்டும் என்றும் இதில் ப்ராஹ்மணஸமூஹத்தின் ஆசாரங்கள் குன்றாமல் இருப்பதற்காக ஸம்ஸ்க்ருதம், காவ்யம், நாடகம் முதலியன முக்யமாகவும் அத்துடன் இதர பாடங்களாகிய இங்கிலீஷ், கணக்கு, ஹிந்தி முதலானவைகளும் கூடவே போதிக்க ஏற்பாடு செய்யப்போவதாகவும் சொல்லி பெற்றோர்களை தங்கள் பையன்களை இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டார். இந்தப் பள்ளிக்கூடத்தில் 1 முதல் 5 வகுப்புக்களையும் மூன்று வருஷங்களிலும் 1 வது முதல் 6 வது பாரம் வரையில் ஆறுவருஷங்களிலும் நடத்தப் போவதாகவும் இதில் கடைசி பரீக்ஷையாகிய Entrance பரீக்ஷையில் பாஸ் செய்தவர்கள் காலேஜிற்கு Intermedate வகுப்புக்குப் போக யோக்யதை உள்ளவர்கள் என்று ஸர்க்காரால் 17–12–52 ல் கெஜட்டில் ப்ரசுரப்படுத்தப்பட்ருக்கிறது.

பிறகு ஸ்ரீ தேசிகதர்சன விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ாமி, பகவானுடைய ப்ரதிநிதியாகிய ஸ்ரீ அழகியசிங்கர் இந்த ஸமயத்தில் நம் ப்ராஹ்மண ஸமூஹத்தின் மதாசாரங்கள் குன்றாமல் இருப்பதற்காக அனேக காரியங்கள் உத்தேசித்திருப்பதில் இது ஒன்று என்றும், இதை எல்லோரும் ஆதரித்து நன்கு நடந்து வருவதற்கு ஒத்தாசை செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். இதேமாதிரி பள்ளிக்கூடங்கள் அனேகமாக எல்லா ஊர்களிலும் ஏற்படுத்த ஸ்ரீ அழகியசிங்கர் ஸித்தமாயிருப்பதால் எல்லோரும் சேர்ந்து தங்கள் பையன்களை இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி ஆதரிக்கவேணுமாறு ஸ்ரீ. எம். பி. க்ருஷ்ணஸ்வாமி ஐங்கார் கேட்டுச்கொண்டுகூட்டத்தை முடித்தார்.

A, நரஸிம்ஹ அய்யங்கார்
கௌரவ மானேஜர்
ஸ்ரீ அஹோபிலமடம்.
27–5–54

ஸ்ரீ வில்லிபுத்தூரில்
ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகியசிங்கர்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் 'ப்ரணவம் அவதரித்த' இத்திவ்ய தேசத்தில் வடபத்ரசாயி எழுந்தருளியிருப்பதுடன் 'விஷ்ணுசித்தர்' என்னும் பெரியாழ்வாரும் அவருடைய திருமகளான கோதையும் அவதரித்த பெருமை வாய்ந்ததும் ஸ்ரீ அழகியமணவாளன் ஸதாகடாக்ஷித்துக்கொண்டிருக்கும் இப்புனித ஸ்தலத்திற்கு 'அரிமுகன் அச்சுதன் கைமேல் என் கைவைத்து பொரிமுகந்தட்டக்கனக்கண்டேன்' என்கிறபடியே அரிமுகனை லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அர்ச்சாரூபியாய் எழுந்தருள அந்த நரஸிம்ஹனே விபவாவதாரம்பண்ணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமி முதல் ஆச்ரித ரக்ஷணார்த்தமாய் எழுந்தருளியிருந்து இப்போது 43–வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபனசார்யேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் எல்லா திவ்யதேசங்களையும் மங்களாசாஸனம் செய்து கொண்டு இப்பொழுது இங்குமங்களாசாஸனத்துக்குஉகந்து எழுந்தருளினதும் இத்தல வித்வான்களும், பக்திமான்களும் தேவஸ்தான அநந்த கொத்துப்பரிஜனங்களும், மஹாஜனங்களும்பாராட்டி வரவேற்கிறோம்.

அஷ்டாக்ஷரத்தை அறிந்தமஹான்கள் எழுந்தருளினாலே வியாதி, துர்பிக்ஷம் முதலியதீங்குகள் 'ஆதித்தனைக்கண்ட அந்தகாரத்தைப்போல் அகன்று விடும்' என்று பெரியோர்கள் ஸாதித்திருக்கிறபடியால் சென்ற எட்டு ஆண்டுகளாக மழையில்லாது அனேக கஷ்ட நஷ்டங்களை அநுபவித்துக் கொண்டிருக்கும் இத்தல வாஸிகளுடைய கஷ்டங்களை போக்கடித்து அநுக்ரஹிக்கவே ஸ்ரீ அழகியசிங்கர் மங்களா சாஸனத்திற்கு எழுந்தருளுகிறதைமனப்பூர்வமாக வரவேற்கிறோம். இனி இந்நகர ப்ரதேசங்களிலும் 'தீங்கின்றி மும்மாரி பெய்து நீங்காத செல்வம் நிலை பெறும்' என்று உறுதியாய் நாங்கள் நம்புகிறோம்.

அத்யாத்ம சாஸ்த்ரத்தை அறிந்த வரும் ரஹஸ்யத்ரயஸாரத்தின் ஸாராம்சத்தை ஸச்சிஷ்யர்களுக்கு உபதேசித்துக்கொண்டும், ஸ்ரீ பாஷ்யம், பகவத் விஷயம் மற்றுமுள்ள சாஸ்திரங்களையும் அதிகாராநுகுணமாக உபதேசித்துக்கொண்டும், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்துக்கொண்டும், வர்ணாச்ரம தர்மத்தை நிலை நாட்டிக்கொண்டும் ஸ்ரீ ஆண்டாளுடைய அநுக்ரஹத்தால் 'ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு எழுந்தருளினார். இவ்வூருக்கு ஸுபிக்ஷம் ஏற்பட்டது. கலியும் நீங்கிற்று' என்று ஸமஸ்தமானவர்களும் ஸந்துஷ்ட சித்தராய் 'தஷிஷி வணிவாஸெதந வஸிவருஸெந ஸேவயா' என்கிறபடியே ஸ்ரீ அழகியசிங்கர் அடியோங்களைக் கடாக்ஷித்து அநுக்ரஹிக்கவேண்டுமென்று ஸமர்ப்பித்து ப்ரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்

ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தான கோயில்கள் வழிபாடு பாதுகாப்புக் கமிட்டி அங்கத்தினர்களும், மற்றும் இந்நகர வாஸிகளும்.

அட்டைப்பட விளக்கம்

ஸ்ரீஜனகவல்லித் தாயார்

மதுராந்தகத்தில் கோயில்கொண்டிருக்கும் மிகவும் வரப்ரஸாதியாகிய இத்தாயாரின் ஸந்நிதி ஓர் ஆங்கிலேயரின் பக்தியால் கட்டப்பட்டதென்றால் இக்கலியில் இதைக்காட்டிலும் ஆச்சர்யம் உண்டா. ஆனி மீ நடந்த ப்ரஹ்மோத்ஸவத்தில் ஏராளமான பக்தர்கள் வேத ப்ரபந்த பாராயணங்களில் ஈடுபட்டு பகவத்கைங்கர்யம் செய்தார்கள். இவர்களுக்கு வேண்டிய போஜன ஸௌகர்யத்திற்காக இவ்வூர் அன்னூர் ஸ்ரீ. உப. ராஜகோபாலாசாரியர் பல பக்தர்களின் உதவியினால் ஓர் சிறப்பான ததீயாராதன கைங்கர்யத்தை ஏற்று நடத்திக் கொடுத்தார் என்றால் அதுவும் இப்பிராட்டியின் மஹிமையே.

(ஸம்பாதகர்)

श्रीः

ஸ்ரீ அஹோபிலமடாதீன மாம்பலம் ஓரியண்டல் ஸ்கூல் நூதன கட்டிடப்
பிரவேச காலத்தில் ஷி கலாலய ப்ரதாநாசிரியரின்
ப்ரார்த்தநா ச்லோகங்கள்.

स्वस्ति श्रीवीररघ्वीट्शठरिपुयतिनाराधितश्रीनृसिंह–
स्वेनोक्तां वेदविद्यां कलिबलगळितां स्थापयिष्यन्पृथिव्याम् ।
बालेभ्यः पाठशालां रघुपतिसविधे माम्बलाख्ये पुरेऽस्मिन्
संस्थाप्योद्घाटयंश्च प्रदिशतु भगवान्माणवेभ्यः प्रसन्नः ॥

अत्रत्याश्चानुगृह्णन्त्वखिलवटुगणं वाग्भिरर्थैस्समेतैः
श्रीमान् श्रीवीररघ्वीट् शठरिपुयतिराट् प्रीतयेचाच्युतस्य ।
काले काले सुवृष्ट्या वसुनिचयमुचो वारिदा वित्तवन्तः
सद्विद्यापाठशालावटुकनिवहसस्याभिवृद्धिं दधीरन् ॥

प्राचीनभाषाध्ययनपाठशाला विराजतां ।
माम्बलेऽस्मिन्पुरे स्थित्वा प्रबला लोकविश्रुता ॥

अहोबिलमठाधीनो नूतनोऽयं कलालयः ।
महतामादरेणात्र वर्धतां वटबीजवत् ॥

वयं चाध्यापकाश्शिष्या अधुना प्रार्थयामहे ।
साहाय्यं भवतां नस्स्यादाशिषश्चेति सत्तमाः ॥

ज्ञानानन्दकरप्रज्ञादानशक्तिमनुक्षणम् ।
ज्ञानानन्दमयो देवो दद्यान्नश्च हयाननः ॥

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

ஜய ஸூ ஆடி – ஆவணி மீ 1954 ஸூ ஜூலை – ஆகஸ்டு மீ

[தக்ஷிணாயநம்; க்ரீஷ்ம ருது; கடக மீ]

16-7-54	ஆடி மீ 1உ	வெள்ளிக்கிழமை	கடகரவி 25-19 தக்ஷிணாயன புண்ய காலம். ஸங்க்ரமண தர்ப்பணம். சூன்ய திதி.
17-7-54	2உ	சனிக்கிழமை	சூன்ய திதி.
18-7-54	3உ	ஞாயிற்றுக்கிழமை	சூன்ய திதி.
24-7-54	9உ	சனிக்கிழமை	நவமி-தசமி திதித்வயம்.
26-7-54	11உ	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
29-7-54	14உ	வியாழக்கிழமை	● அமாவாஸ்யை.
30-7-54	15உ	வெள்ளிக்கிழமை	புஷ்யம் 36-வது பட்டம் ஸ்ரீநிவாஸ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
2-8-54	18உ	திங்கட்கிழமை	திருவாடிப்பூரம் 26-வது பட்டம் ஸ்ரீரங்கநாத யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
6-8-54	22உ	வெள்ளிக்கிழமை	அஷ்டமி திதி; ஸ்வாதி; பெரியதிருவடி; 25-வது பட்டம் ஸ்ரீநிவாஸ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
7-8-54	23உ	சனிக்கிழமை	நவமி திதி.
8-8-54	24உ	ஞாயிற்றுக்கிழமை	அதிதி.
10-8-54	26உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி.
14-8-54	30உ	சனிக்கிழமை	○ பூர்ணிமா; ருக் யஜுருபாகர்மம்.
15-8-54	31உ	ஞாயிற்றுக்கிழமை	கடக க்ருஷ்ண ப்ரதமை திதி; காயத்ரீ ஜபம்.
16-8-54	32உ	திங்கட்கிழமை	கடகக்ருஷ்ண த்விதீயை-த்ருதீயை திதித்வயம் ஸிம்ஹ ரவி 53-51.

[வர்ஷ ருது– ஸிம்ஹ மீ]

17-8-54	ஆவணி மீ 1உ	செவ்வாய்க்கிழமை	விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம் சூன்ய திதி.]
21-8-54	5உ	சனிக்கிழமை	ஜன்மாஷ்டமி முனித்ரயஸ்ரீஜயந்தி.
22-8-54	6உ	ஞாயிற்றுக்கிழமை	பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி.
24-8-54	8உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி.
27-8-54	11உ	வெள்ளிக்கிழமை	போதாயந அமாவாஸ்யை.
28-8-54	12உ	சனிக்கிழமை	● அமாவாஸ்யை.
31-8-54	15உ	செவ்வாய்க்கிழமை	ஸாமோபாகர்மம்.

குறிப்பு—ஆடி மீ 1உ வெள்ளிக்கிழமை க்ரஹண தர்ப்பணமும், ஸங்க்ரமண தர்ப்பணமும் (இரண்டும்) செய்யவேண்டும். இவ்விரண்டு கர்மாக்களும் நைமித்திக கர்மாக்களானபடியால் இரண்டும் ஒரே தினத்தில் செய்யவேண்டியவைகள். (ஸம்பாதகர்)

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீ ஸாரபோதிநீ

முதல் பாகம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸாரபோதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வதுபட்டத்தில்மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுலருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். வஹி வஹ்ணுவ்ருஹா நூஹவாயிகாரவயஞுமான இக் க்ரந்தம் விஜய வருஷம் தை மாதம் உத்திராடத்தன்று வெளியாகியிருக்கிறது. உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டது. 58½ பக்கங்களுடன் கூடியது. இதன் விலை:—

1. (Full) புல்காலிகோ பயிண்டு புத்தகம்— ரூ 6-8-0
2. (Half) ஆப்காலிகோபயிண்டு புத்தகம்— ரூ 6-0-0
3. ராப்பர் பயிண்டு புத்தகம்— ரூ 5-8-0

அபேக்ஷிக்குமாஸ்திகர்களனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவரபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமாலோல முத்ராலயம்,
திருவள்ளூர்,
செங்கல்பட்டு ஜில்லா.

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணு தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரை குறிப்பிட்டே அனுப்ப வேண்டும்.

புத்தகம்வேண்டியவர்கள் அதன் க்ரயத்தில் பாதியை முன்பணமாக அனுப்பி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளவும். (பாக்கிங் & தபால் செலவுகள் தனி.)

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobia-Mutt Sanskrit College, Madurantakam.